
# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2024 நவ. 16-30 தொகுதி 23 இதழ் 08 விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200


# அமெரிக்காவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அதானியின் லஞ்ச வழக்குகளை இந்திய உச்ச நீதிமன்றம் தானே முன்வந்து விசாரிக்க வேண்டும்!



## அமெரிக்காவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள

# அதானியின் லஞ்ச வழக்குகளை

### இந்திய உச்ச நீதிமன்றம் தானே முன்வந்து விசாரிக்க வேண்டும்

புது தில்லி, 21 நவம்பர் 2024

அதானி குழுமம் இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து அதிக விலையுள்ள சோலார் சக்தி ஒப்பந்தங்களைப் பெறுவதற்கு முயற்சித்ததாகவும், அமெரிக்க சட்டங்களை மீறி அமெரிக்க முதலீட்டுச் சந்தையில் நிதி திரட்டியதாகவும் அமெரிக்க குற்றவியல் நீதித்துறையால் குற்றம் சாட்டப்பட்டது. இது அதானி குழுமத்தின் குற்றவியல் தவறுகளை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. இந்திய அரசின் கட்டுப்பாட்டு அமைப்புகளும், மோடி அரசும் அதானி குழுமத்தைப் பாதுகாக்கவும், அதானி குழுமத்தின் நலன்களை மேம்படுத்தவும் கைகோர்த்து செயல்பட்டுள்ளதை வெளிப்படுத்துகிறது.

ஒரு வருடத்திற்கு முன்பு, அதானி குழுமத்தின் மிகப்பெரிய நிறுவன மோசடி குறித்து ஹிண்டன்பர்க் வெளிப்படுத்திய தகவலால் உலகம் அதிர்ச்சியடைந்தபோது, மோடி அரசு அதானி குழுமத்தைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் செய்தது. மோடி அரசையும் செபி (SEBI)யையும் பொறுப்பேற்கச் செய்ய உச்ச நீதிமன்றமும் கூட தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. தற்போதைய குற்றச்சாட்டுகள் நிறுவன மோசடிகள் பற்றியவை மட்டுமல்ல, லஞ்சம் போன்ற தீவிர ஊழல் செயல்களைப் பற்றியவையாகும். இந்தக் குற்றச்சாட்டுகள் வெளிநாட்டு நீதித்துறையில் எழுப்பப்பட்டுள்ளதால், இந்தியாவில் நடந்த



இந்த மிகப்பெரிய ஊழலை மோடி அரசு புறக்கணிப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது.

மோடி அரசு உடனடியாக விசாரணைக்கு உத்தரவிடாவிட்டால், இந்தியாவின் மீதான சர்வதேச பார்வைக்கும் உள்நாட்டு பொருளாதாரத்திற்கும் நுகர்வோரின் நலன்களுக்கும் மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத்தும் இந்தக் குற்றச்சாட்டுகளை இந்திய உச்சநீதிமன்றம் தானே முன்வந்து விசாரிக்க வேண்டும். 2,029 கோடி ரூபாய் (265 மில்லியன் அமெரிக்க டாலர்) லஞ்ச மோசடி குறித்து நீதிமன்ற கண்காணிப்பில் மத்திய புலனாய்வு துறை (CBI) விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும். இந்திய முதலீட்டு கட்டுப்பாட்டு அமைப்பின் செயல் திறனை மேம்படுத்துவதற்காக செபி தலைவரையும் அந்த பொறுப்பிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும்.

-திபங்கர்,

பொதுச் செயலாளர், சிபிஐ(எம்எல்)






மாலை தீப்பொறி

இருவார இதழ்
2024 நவ. 16 - 30
தொகுதி 23 இதழ் 08

முதன்மை ஆசிரியர்
சங்கர் .வீ

ஆசிரியர்
ஜி. ரமேஷ்

ஆசிரியர்குழு
பழ. ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ. சந்திரமோகன்
கே. ஜி. தேசிகன்

மேலாளர்
சொ. இரணியப்பன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக்
கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

# தமிழ்நாட்டை சுடுகாடாக்க தமிழக மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்!

தமிழ்நாடு, ஒடிசா, ஜம்மு-காஷ்மீர், சத்தீஸ்கர், ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் மின்சார விநியோக நிறுவனங்கள், மத்திய அரசின் சூரிய ஆற்றல் கழகத்துடன் (SECI - Solar Energy Corporation of India) பி.எஸ்.ஏ ஒப்பந்தத்தில் (POWER SALE AGREEMENT - FOR SALE OF SOLAR POWER) கையெழுத்திட்டு இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துப் பெற்ற ஒப்பந்தங்களை வைத்து, அமெரிக்க முதலீட்டார்களை அதானி நிறுவனம் ஏமாற்றியிருக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டு மோடியின் ஆருயிர் நண்பர் அதானியைக் கைது செய்ய பிடி ஆணை பிறப்பித்துள்ளது அமெரிக்க நீதிமன்றம். இந்தப் பின்னணியில், கென்யா நாடு அதானி குழுமத்துடன் போட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்துள்ளது. கென்யா அரசுடன் அதானி குழுமம் மின் ஒப்பந்தம் செய்தபோதே அந்நாட்டு மக்கள் கடுமையாக எதிர்த்தார்கள். அதேபோல், வங்க தேசம், இலங்கை போன்ற நாடுகளிலும் தற்போது அதானி குழுமத்திற்கு பிரச்சனைகள் வர ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில், தமிழ்நாட்டின் மின் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, கடந்த மூன்று ஆண்டுகளாக, அதானி நிறுவனத்துடன் தமிழ்நாடு மின்சார வாரியம் எந்த ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளவில்லை. சோலார் எனர்ஜி என்ற மத்திய அரசின் மின் நிறுவனத்தின் மூலமே ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். சோலார் எனர்ஜி அதிகாரிகள் இந்த லஞ்ச ஊழலில் சம்பந்தப்பட்டிருக்கலாம். இருக்கட்டும். ஆனால், தமிழ்நாட்டில் அதானிக்கு மட்டுமல்ல, அம்பானி, வேதாந்தா, மிட்டல் போன்ற பல்வேறு பெருங்குழும நிறுவனங்களுக்கு கடல், மலை, விவசாயம் என தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை அழிக்க வழிவிடப்பட்டுக் கொண்டே இருக்கின்றதே. மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி, மாங்குளம் உள்ளிட்ட பகுதியில் சுமார் 5000 ஏக்கர் பரப்பளவில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்கும் உரிமத்தை, தூத்துக்குடி ஸ்டெர்லைட் கொலைகார நிறுவனமான வேதாந்தாவின் ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட்டிற்கு மோடி அரசு வழங்கியுள்ளது. இதனால், மதுரை மாவட்டத்தின் வனம், தொல்லியல், விவசாயம் மட்டுமின்றி அப்பகுதிகளின் வாழ்க்கையே அழிக்கப்படும் அபாயம் உள்ளது. அந்த மக்கள் எங்கள் உயிர் போனாலும் சுரங்கம் அமைக்க அனுமதிக்க மாட்டோம் என்று போராட்டக் களத்தில் இறங்கியுள்ளனர். பரந்தூர் விமான நிலையம் வேண்டாம் என்று தொடர்ந்து மக்களைத் திரட்டிப் போராடிய ஏகனாபுரம் ஊராட்சி துணைத் தலைவர் 35 வயதே ஆன திவ்யா மன அழுத்தத்தின் காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது கணவரும் பரந்தூர் விமான நிலைய எதிர்ப்புப் போராட்டத்தில் முன்நிற்பவர். தொடர்ந்து 2 ஆண்டுகளாகப் போராடும் மக்களைக் கண்டு கொள்ளாமல் நிலம் கையகப்படுத்தும் வேலையை தமிழ்நாடு அரசுதான் செய்து கொண்டிருக்கிறது. அதற்கேற்பவே சமீபத்தில்

தொடர்ச்சி 8ஆம் பக்கம்...

# அகில இந்திய தொழிற்சங்க மைய கவுன்சில் (AICCTU) 11 ஆவது அகில இந்திய மாநாடு அறைகூவல்!

# தொழிலாளர் உரிமைகளை மீட்டெடுப்போம்!

**2025; பிப்ரவரி 24 – பொது மாநாடு தால்கடோரா ஸ்டேடியம்.**

**பிப்ரவரி 25; 26 – பிரதிநிதிகள் மாநாடு பியாரேலால் பவன் – புது டெல்லி**

அன்பார்ந்த தோழர்களே!

ஏஐசிசிடியு தனது 11ஆவது அகில இந்திய மாநாட்டை 2025, பிப்ரவரி 24 - 26 தேதிகளில் புது டெல்லியில் நடத்துகிறது.

இந்திய அரசாங்கம் நவ தாராளவாத சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டதன் விளைவாக தொழிலாளர் வர்க்கத்தின் மீதான தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டு, தொழிலாளர் வர்க்க இயக்கம் காத்திரமான சவால்களை எதிர்கொண்ட பின்னணியில் ஏஐசிசிடியு தனது பயணத்தை 1989இல் துவங்கியது. அப்போது ஆளும் வர்க்கத்தின் தாக்குதலுக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளர்களை ஆயத்தப்படுத்த "தொழிற்சங்கங்களை ஜனநாயகப்படுத்துவோம்! தொழிலாளர்களை அரசியல்படுத்துவோம்!" என்ற முழக்கத்தை முன் வைத்தது. ஆளும் வர்க்கம் நாட்டை நவ தாராளவாத சந்தைப் பொருளாதாரம் என்ற மாற்றத்தை நோக்கி செலுத்திய போது, ஏஐசிசிடியு தொழிற்சங்க இயக்கத்தை தொழிற்சாலையின் நான்கு சுவர்களுக்குள்ளிருந்து வெளியில் கொண்டு வந்து அதை எதிர்த்துப் போராட தீர்மானித்தது. ஏஐசிசிடியுவின் துவக்க மாநாட்டிலிருந்து இந்தப் போர் முழக்கமானது தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் நிறைவேற்றம், மிகக் கொடூரமான தொழிற்சாலைகள் தனியார்மயமாக்கம், தொழிலாளர் சக்தியை முறைசாராமயப்படுத்துவது ஆகியவற்றை எதிர்கொண்டு இடைப்பட்ட காலத்தில் பல்வேறு கட்டங்களைக் கடந்து வந்து, இப்போது 11ஆவது மாநாட்டில் அதன் அறைகூவலானது 'தொழிலாளர் உரிமைகளை மீட்டெடுப்போம்' என்பதாக இருக்கிறது.

சவால்களை நேருக்கு நேர் எதிர்கொண்ட ஏஐசிசிடியு கடந்த 35 ஆண்டு காலத்தில் எதிர்ப்பு இயக்கங்களை சுதந்திரமாகவும் மற்ற எல்லா மைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து ஒருமைப்பாட்டு நடவடிக்கைகள் மூலமும் கட்டமைத்து வந்துள்ளது.

கடந்த 11 ஆண்டுகால மோடி தலைமையிலான பாஜக ஆட்சியில் இப்போது தொழிலாளர் வர்க்கம் மீதான கொடூர சுரண்டலும் ஒடுக்குமுறையும் உச்சத்தை எட்டியுள்ளது. இதுவரை இல்லாத வேலை இல்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு ஆகியவற்றின் கூடவே பெரும் எண்ணிக்கையில் ஆட்குறைப்பு, சம்பள வெட்டு, ஊதிய வீழ்ச்சி, சமூக பாதுகாப்புத் திட்டங்களை ஒழித்துக்கட்டுவது, அனைத்தும் தழுவிய ஒப்பந்தமயம், ஆலை மூடல், கதவடைப்பு, ராக்கெட் வேகத்தில் உயரும் வறுமை, எங்கும் நிறைந்திருக்கும் பசி மற்றும் அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வு என்ற பின்னணியில் இன்று இந்தியத் தொழிலாளர் வர்க்கம் வாழ்வு, வாழ்வாதாரம், உரிமைகள் மீது இதுவரை இல்லாத மோசமான தாக்குதலைச் சந்தித்து வருகிறது.

"விக்சித் பாரத்"- (வளர்ச்சியடைந்த இந்தியா) என்ற பெயரில் மோடி எல்லாவற்றையும் விற்கிற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். ஒட்டுமொத்த இந்தியாவும் அதானிகள், அம்பானிகள் போன்ற அவருடைய கார்ப்பரேட் நண்பர்களுக்கு விற்கப்பட்டு வருகிறது. இதன் விளைவு ஒரு சிலர் கைகளில் செல்வம் குவிவது என்பதாகவும் வேலைகள், வாழ்வாதாரம் அழிக்கப்படுவதுமாகவும் மட்டுமே உள்ளது. உழைக்கும் மக்களும் ஏழைகளும் அதிகரித்த அளவில் அத்தியாவசிய தேவைகளைக் கூட அணுக முடியாதபடியாகி வருகிறது. முன்வைக்கப்பட்டுள்ள தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் மூலம் தொழில் உறவுகள் எஜமானன் - அடிமை உறவாக மாறிவிட்டது. தொழில் செய்வதை இலகுவாக்குவது என்ற பெயரில் தொழிலாளர்களின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்படுகின்றன. 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளானது நடப்பில் உள்ள தொழிலாளர் சட்டங்கள் அத்தனையையும் ஒழித்துக் கட்டுவதன் மூலம் தொழிலாளர் உரிமைகளை நிர்மூலமாக்குவதை குறியாகக் கொண்டுள்ளது. "ஊபா" சட்டத்தோடு கூடுதலாக மூன்று குற்றவியல் சட்டங்களும் அதோடுகூட தொழிலாளர் சட்டத்

தொகுப்புகளும் இணைந்து கொள்வதானது நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைக்கு நிச்சயமாக பேரிடியாக அமைய உள்ளது.

போலீஸ் இராஜ்ஜியம் இப்போது புல்டோசர் இராஜ்ஜியத்திடம் சேர்ந்து மேலும் வலுவூட்டப்படுகிறது. இது வறியவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்க்கையை, வாழ்வாதாரத்தை கொடூரமாக இடித்துத் தள்ளுகிறது. தொழிலாளர்களின் குரலும் அதன் தொழிற்சங்கங்களும் மோடியின் மாதிரி வளர்ச்சிக்கு முக்கிய தடைகளாக இருப்பதாக பூதாகரப்படுத்தப்படுகின்றன. அதன் விளைவாக குற்றமயப்படுத்தப்படுகின்றன. சென்னை சாம்சங் இந்தியா தொழிலாளர்கள் போராட்டம், மூலதனத்துக்கு தொழிலாளர்கள் தடையை உருவாக்குகிறார்கள் என்றும் தொழிற்சங்கங்களை உருவாக்குவதன் மூலம் மூலதன வெளியேற்றத்துக்கு வழிவகை செய்கிறார்கள் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு பாஜக தலைவர்களால் பூதாகரப்படுத்தப்பட்டது. தொழிற்சங்கங்கள் வளர்ச்சிக்கு எதிரானவை என்று குற்றம் சாட்டி விட்டு, தொழிலாளர்கள் வாழ்க்கைக்கான ஊதியம் பெறும் உரிமை, அர்த்தமுள்ள சமூக பாதுகாப்பு, கவுரவமான வாழ்க்கை ஆகியவை பறித்தெடுக்கப்படுகின்றன. மோடியின் 11 ஆண்டு ஆட்சி காலத்தில் தொழிலாளர் மீதும், நாட்டின் மீதும் கழுத்தை நெறிக்கும் மூலதன பிடி முழுமையாக நிறுவப்பட்டுள்ளது. எல்லா ஜனநாயக விழுமியங்களையும் நெறிமுறைகளையும் இடித்துத் தள்ளிவிட்டு, அரசாங்கமும் ஒரு கார்ப்பரேட் நிறுவனம் போல் நடத்தப்படுகிறது.

துன்பங்கள், தாக்குதல்கள், பேரழிவுகள் என்ற இந்தச் சூழலை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மோடி அரசாங்கமும் பாஜக, ஆர்எஸ்எஸ் கூட்டமும் மதவாத துருவச் சேர்க்கையை தீவிரப்படுத்திட மூர்க்கத்தனமாகச் செயல்படுகின்றன. வெறுப்பு அரசியலை அதி உயர்ந்த மட்டத்துக்கு உயர்த்துவதற்கும், அடிப்படை பிரச்சினைகளிலிருந்து மக்கள் கவனத்தை திசை திருப்பி மக்களின் போராட்ட ஒற்றுமையை பிளவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டும் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள சமீபத்திய வெறுப்பு நிறைந்த, நஞ்சு தோய்ந்த முழக்கம் என்பது "நீங்கள் பிளவுபட்டீர்கள் என்றால், கொல்லப்படுவீர்கள்" என்பதாகும்.

இந்தத் தாக்குதலை துணிச்சலாக எதிர்கொண்டும் மோடி அரசாங்கம் மற்றும் பாஜக – ஆர்எஸ்எஸ்-ஸின் பிளவுவாதத் திட்டத்தை முறியடிக்கும் விதமாக உழைக்கும் மக்களும், ஏழைகளும் வீதிகளிலும் அதேபோல் தேர்தல்களிலும் எதிர்த்துப் போராடி வருகிறார்கள். 2024 மக்களவைத் தேர்தலில் பாஜகவை அறுதிப் பெரும்பான்மைக்கு கீழே தடுத்து நிறுத்தி, (2019ல் பெற்ற இடங்களை விட 63 தொகுதிகள் குறைவு) சர்வாதிகார மோடி இராஜ்ஜியத்திற்கு பெருத்த அடியை வழங்கியிருக்கிறார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க, போர்க்குணமிக்க, ஓராண்டு கால விவசாய இயக்கம், பிடிவாதமாக இருந்த மோடி அரசாங்கத்தை 3 கருப்பு விவசாய சட்டங்களையும் திரும்பப் பெற வைத்தது. திட்டத் தொழிலாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவு தொழிலாளர்களின் சக்தி வாய்ந்த இயக்கங்களுடன், புதிய பென்சன் திட்டத்திற்கு எதிராக பழைய பென்சன் திட்டம் கோரி அரசு ஊழியர்கள் நடத்துகிற நீடித்த இயக்கமும் வீதிகளில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றன. எப்படி இருந்த போதிலும், மோடி அரசாங்கம், மக்கள் அளித்த தேர்தல் தீர்ப்புகளையும், வீதிப் போராட்டங்களின் செய்தியையும் தொடர்ந்து அவமதிக்கிறது. தொழிலாளர் சட்டத் தொகுப்புகள், தனியார் மயம் உள்ளிட்ட தொழிலாளர் விரோத, கார்ப்பரேட் சார்பு நிகழ்ச்சி நிரலை எவ்வித தங்குதடையின்றி மோடி அராஜகமாக திணித்து வருகிறார். மக்கள் போராட்டங்களையும், தேர்தல் தீர்ப்புகளையும் மோடி அரசாங்கம் அராஜகமாக மீறி வருவதானது சர்வாதிகார மோடி இராஜ்ஜியத்திற்கு தீர்மானகரமான அடி கொடுக்கிற தொழிலாளர் வர்க்கத்தின், உழைக்கும் மக்களின் அனைத்தும் தழுவிய யுத்தத்தை வரவழைத்தே தீரும்.

இது போன்றதொரு சவாலான சூழலில், தொழிலாளர் வர்க்க இயக்கம் உயர்ந்த சிகரங்களை அடைய தன்னைத் தயார்படுத்திக்கொள்ளவும், தனது உறுதிப்பாட்டை வலிமைப்படுத்திக் கொள்ளவும், ஏஐசிசிடியு தனது 11ஆவது அகில இந்திய மாநாட்டை நடத்துகிறது. நமது நாட்டின் சின்னமாக விளங்கி வரும் ஜனநாயகத்தையும், அரசமைப்புச் சட்டத்தையும் பாதுகாக்கும் அரணாக எழுந்து நின்று, நமது எல்லா உரிமைகளையும் மீட்டெடுக்க தொழிலாளர் வர்க்கத்திற்கு ஏஐசிசிடியு அறைகூவல் விடுகிறது. அகில இந்திய மாநாடு பெருவெற்றி பெற்றிட, சாத்தியமான எல்லா வகையிலும் ஆதரவு தந்து, நிதி வழங்கி உதவுமாறும் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...

# தொழிலாளர் உரிமைக்காகப் போராடிய இருவரையும் விடுதலை செய்க! – ஏஐசிசிடியு வேண்டுகோள்!





**"பிரிக்கால் தொழிலாளர் போராட்டத்தில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு 9 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலுள்ள தோழர்கள் மணிவண்ணன், ராமமூர்த்தி இருவரையும் தமிழ்நாடு அரசு நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க வேண்டும்"**

கோவையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள பிரிக்கால் ஆட்டோமொபைல் உதிரி உறுப்புகள் தொழிற்சாலையில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலைசெய்து வருகின்றனர். பல நூறு கோடிகள் முதலீடும் உள்நாட்டு, வெளிநாட்டு சந்தையும் பெருத்த லாபமும் கொண்டுள்ள இந்த ஆலையில் பல்லாண்டு காலமாக தொழிலாளர் தேர்ந்தெடுத்த சங்கமில்லாமலும் சட்டரீதியான உரிமைகளுமின்றி சக்கையாக கசக்கிப் பிழியப்பட்டு வந்தனர். நூற்றுக்கணக்கான பெண் தொழிலாளர்கள் முதுகுத் தண்டு பாதிப்பு, கருச்சிதைவு உள்ளிட்ட சொல்லொனா துயரங்களைச் சுமந்து வந்தனர்.

இந்தநிலையில் மார்ச் 2007 ல் பிரிக்கால் தொழிலாளர்கள் ஏஅய்சிசிடியு தொழிற்சங்கத்தை தேர்ந்தெடுத்தனர். தொழிலாளரது சட்டரீதியான, ஜனநாயக உரிமையை மறுத்தும் அரசியல் சட்டத்துக்கு புறம்பாகவும் சங்கத்தை அங்கீகரிக்க பிரிக்கால் நிர்வாகம் மறுத்து வந்தது. தொழிலாளர்கள் உறுதியுடன் இருந்த காரணத்தினால், ஆத்திரமுற்ற பிரிக்கால் நிர்வாகம் அடக்குமுறை யுக்திகளை கையாண்டது. தொழிலாளர் முன்னோடிகள், தலைவர்கள் மீது கடும் அடக்குமுறையை ஏவியது. பழிவாங்கும் நடவடிக்கைகளாக சம்பளவெட்டு, இடைநீக்கம், பணி நீக்கம் உள்ளிட்ட அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டது. பழிவாங்கும் நடவடிக்கையின் உச்சகட்டமாக தொழிலாளர் முன்னோடிகள் 6 பேரை நிர்வாகம் உத்தரகாண்ட் மாநிலத்துக்கு இடம்மாற்றம் செய்தது. அடுத்து 65 தொழிலாளர்கள் எவ்வித விசாரணையுமின்றி ஒரே நாளில் பணி நீக்கம் செய்யப்பட்டனர். நிர்வாகத்தின் இந்த நடவடிக்கைகள் தொழிலாளர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பான நிலையை ஏற்படுத்தியது. செப்டம்பர் 2009 ல் ஆலைக்குள் நடந்த விரும்பத்தகாத, அசாதாரண சூழ்நிலையால் மனிதவள அதிகாரி ராய் ஜார்ஜ் உயிரிழந்தார்.

கொலை என பதிவு செய்யப்பட்ட இந்த வழக்கில் (557/2009), போலீஸ் வேட்டைக்கு அஞ்சி சம்பத் என்ற தொழிலாளியின் மனைவியும் மணிகண்டன் என்ற தொழிலாளியும் தற்கொலை செய்து கொண்டனர். ஏஅய்சிசிடியு தலைமையிலான தொழிலாளரது நீண்ட போராட்டத்துக்குப் பிறகு சங்கத்தை அங்கீகரிக்க வேண்டிய நெருக்கடி நிர்வாகத்துக்கு உருவானது. மட்டுமின்றி, ஊதிய உடன்பாடு, ஊதிய உயர்வு என பறிக்கப்பட்ட உரிமைகளையும் பெற்றனர். தொழிலாளர் கவுரவத்துடனும் சுயமரியாதையுடனும் பணியாற்றும் நிலையும் உருவானது. இச் சூழலில், செப்டம்பர் 2, 2015 அன்று விசாரணை நீதிமன்றம், தோழர்கள் மணிவண்ணன், ராமமூர்த்தி உள்ளிட்ட 8 பேருக்கு இரட்டை ஆயுள்தண்டனை விதித்தது. தொழிலாளரது மேல்முறையீட்டு மனுவை 2016ல் விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், வழக்கு சரிவர விசாரிக்கப்படாததைச் சுட்டிக்காட்டி மணிவண்ணன், ராமமூர்த்தியின் இரட்டை ஆயுள் தண்டனையை ஆயுள்தண்டனையாக குறைத்தும் மற்ற 6 பேரை விடுதலை செய்தும் தீர்ப்பளித்தது.

உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு சீராய்வு மனு நிலுவையில் உள்ளது.தோழர்கள் மணிவண்ணன் (50), ராமமூர்த்தி (50), இருவரும் 9 ஆண்டுகளுக்கு மேலாக சிறைக் கொடுமையை அனுபவித்து வருகின்றனர். இருவரது துணைவியார்களும் பிள்ளைகளும் பெரும் துயரத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இருவருடைய வயது மற்றும் அவர்களது குடும்ப நிலைகள், தொழிலாளரது உரிமைகளுக்காகவும் தொழிற்சங்க ஜனநாயக உரிமைக்காகவும் போராடியவர்கள் என்பதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, இருவரையும் நல்லெண்ண அடிப்படையில் முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும். இதற்கு பல முன்னுதாரணங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. தோழர்கள் மணிவண்ணன், ராமமூர்த்தி இருவரையும் நல்லெண்ண அடிப்படையில் முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி தமிழ்நாடு மாநில ஏஐசிசிடியு அதற்கான இயக்கத்தைத் துவங்கியிருக்கிறது. பிரிக்கால் தொழிற்சங்கத் தோழர்கள் மணிவண்ணன், ராமமூர்த்தி விடுதலைக்கு தமிழக தொழிற்சங்க இயக்கம், ஜனநாயக சக்திகள், மனித உரிமை, குடியுரிமை அமைப்புகள், ஜனநாயகம், மக்கள் உரிமைகள் மீது பற்று கொண்ட அரசியல் கட்சிகள் ஆதரவு கொடுக்க வேண்டுமாய் ஏஐசிசிடியு தமிழ் மாநிலக் குழு வேண்டுகோள் விடுக்கிறது.

# தமிழகத்தில் மனிதஉரிமை அமைப்பின் வளர்ச்சிக் கட்டங்கள்

## எஸ்.வி. ராஜதுரை

மக்கள் சிவில் உரிமைக் கழகம் (பியூசிஎல்) அமைப்பின் மாநில மாநாடு 2024 நவம்பர் 9 மற்றும் 10 ஆகிய நாள்களில் கோவையில் நடைபெற்றது. "தமிழ்நாடு எதிர்கொள்ளும் மனித உரிமைப் பிரச்சனைகள்" எனும் பொருளில் நடைபெற்ற இம்மாநாட்டின் தொடக்க நிகழ்வு பியூசிஎல் மாநிலத் தலைவர் பேரா. சங்கரலிங்கம் தலைமையில் நடைபெற்றது : மாநில இணைச் செயலர் வழ. சேகர் அண்ணாதுரை வரவேற்புரை நிகழ்த்த, மாநிலப் பொதுச் செயலாளர் வழ. ஜான் வின்சென்ட் மாநாட்டு அறிமுகவுரை ஆற்றினார்.

நாடறிந்த மனிதவுரிமைச் செயல்பாட்டாளர் எஸ்.வி. ராஜதுரை, இந்தியாவிலும் தமிழகத்திலும் மனித உரிமை அமைப்புகள் தோன்றி வளர்ந்த வரலாற்றை பதிவு செய்தார். அவரது விரிவான உரையின் சுருக்கமான பதிவு கீழே வழங்கப்படுகிறது.

"1936 ஆம் ஆண்டு இரவீந்திரநாத் தாகூரின் வாழ்த்துகளுடன் , சரோஜினி நாயுடு, ஜவகர்லால் நேரு ஆகியோரது முன்னெடுப்பில் "இந்திய சிவில் உரிமைகள் கழகம்" (Indian Civil Liberties Organisation - 1CLU ) இந்தியாவில் முதன் முதலாகத் தொடங்கப்பட்டது. பொதுவாக பிரிட்டிஷ் அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து எதிர்வினை ஆற்றக்கூடிய அமைப்பாக அது செயல்பட்டது. அதன் கிளைகள் கல்கத்தா, சென்னை, மும்பை அஸ்ஸாம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டன. இத்தகைய அமைப்பின் தேவையை 1935இல் மும்பையில் நடைபெற்ற காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி மாநாட்டில் ஜெயப்பிரகாஷ் நாராயண் வலியுறுத்தியிருந்தார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை 1936 ஆம் ஆண்டிலேயே இந்திய சிவில் உரிமைகள் கழகத்தின் கிளை செயல்படத் தொடங்கியது. 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டதால், இனி இது போன்ற சிவில் உரிமைகள் அமைப்புகள் தேவையில்லை என்று கூறினார் ஜவகர்லால் நேரு. ஆனால் அவரது கருத்தை வி.எம்.தார்குண்டே, ஜெயப்பிரகாஷ் நாராயண் உள்ளிட்டோர் எதிர்த்தனர்.

1949 ஆம் ஆண்டில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தடை செய்யப்பட்டதன் விளைவாக நடந்த அரசு ஒடுக்குமுறைகளுக்கு எதிர்வினையாற்ற இந்திய சிவில் உரிமைக் கழகத்தின் சென்னை மாகாணக் கிளை முன்வந்தது. இந்த அமைப்பு நடத்திய ஆலோசனைக் கூட்டங்களில் திரு. வி.க.,'விடுதலை' ஆசிரியர் சா.குருசாமி, சாரி (கே.ஜி,.கண்ணபிரானின் தமையனார்) ஆகியோர் செயல்பட்டதாகத் தெரிய வருகின்றது. இது பற்றிய ஆய்வுகளை நாம் மேற்கொண்டு விவரங்களை உறுதி செய்ய வேண்டும்.

தடை செய்யப்பட்டிருந்த பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். 1951 ஆம் ஆண்டு சேலம் சிறையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களைக் கண்டித்துச் சிறைப்பட்டிருந்த கம்யூனிஸ்டுகள் போராடினர். அதனால் அங்கு காவல் துறைத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. 22 கம்யூனிஸ்டுகள் படுகொலை செய்யப்பட்டனர். இது தமிழகமெங்கும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இத்தகைய கொடும் உரிமை மீறலைக் கண்டித்துப் பொது வெளியில் எதிர்ப்புகள் உருவாயின. கம்யூனிஸ்டுகளின் மனித உரிமைகளைப் பாது .காக்க இந்திய சிவில் உரிமைகள் சங்கம் பாடுபட்டது.

நாளடைவில் இந்திய சிவில் உரிமைகள் கழகச் செயல்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டது. 1960களின் இறுதியிலிருந்து ஆந்திரா, தமிழ்நாடு முதலிய மாநிலங்களில் நக்சலைட் இயக்கத்தினர் மீது நடத்தப்பட்ட அரசு ஒடுக்குமுறையின் காரணமாக, ஆந்திராவில்APCLC (Andhra Pradesh Civil Liberties Committee ) என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. சில ஆண்டுகளுப்பிறகு OPDR (Organisation for the Protection of Civil Liberties) என்ற அமைப்பும் தோன்றியது.

தமிழ்நாட்டிலும் நக்சலைட்டுகள் மீதான அரசு ஒடுக்குமுறையின் காரணமாக 1970களில் தமிழ்நாடு சிவில் உரிமைகள் சங்கம் (Tamill Nadu Civil Rights Association) சென்னையில் மட்டும் இயங்கி வந்தது. மேயர் கிருஷ்ணமூர்த்தி அதில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டார் சுழற்சி முறையில்

பிராமணருக்கான ஒதுக்கீட்டில் மேயர் ஆனவர் வழக்குரைஞர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள். அவர், சென்னையில் குடிசைப் பகுதியில்தான் வாழ்ந்து வந்தார். அவரோடு பத்திரிகையாளர்கள் சாஸ்திரி இராமச்சந்திரன், சதானந்த மேனன், சோசலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் விஜயலட்சுமி ஆகியோர் இணைந்து செயல்பட்டனர். மார்க்சியச் செயல்பாட்டாளர் கோவை ஈஸ்வரன் பொதுச்செயலாளராகப் பணியாற்றினார்.

சில நக்சலைட்டுகள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதற்கான இயக்கத்தை அந்த அமைப்பு தீவிரமாக மேற்கொண்டதன் காரணமாக மு.கருணாநிதி தலைமையில் அமைந்திருந்த திமுக அரசாங்கம் அந்த நக்சலைட்டுகளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. அதே அமைப்பு மேற்கொண்ட இன்னொரு முக்கியமான நடவடிக்கை, சீராளன் என்ற நக்சலைட் காவல் துறையினரால் கொல்லப் பட்டதையும், அதை நேரில் பார்த்த சாட்சிகளான வேலு, ஜெயா ஆகிய இருவரும் காவல் துறையால் சித்திரவதை செய்யப்பட்டதையும் பற்றிய உண்மை அறியும் குழுவின் அறிக்கையை அன்றைய ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரியிடம் சமர்ப்பித்ததாகும். அதன் காரணமாக விசாரணை ஆணையம் நியமிக்கப்பட்டது. ஏறத்தாழ நாற்பதாண்டுகளுக்குப் பிறகே வேலு, ஜெயா ஆகியோருக்கு இழப்பீடு தர அரசாங்கத்துக்கு ஆணை பிறப்பித்தது உயர்நீதிமன்றம்.

இந்த அமைப்பு நாளடைவில் செயலற்றுப் போனது. தமிழகத்தில் அதிமுக-வின் எம்ஜிஆர் ஆட்சிக் காலத்தில் 1980 - 1982 ஆண்டுகளில் நக்சலைட்டுகள் மீது கடுமையான ஒடுக்குமுறை மேற்கொள்ளப்பட்டது. ஏராளமான காவல் துறை மோதல் சாவுகள் ( Encounter) நடந்தன. சட்டத்துக்குப் புறம்பான வகையில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். எனவே அந்த நிலைமைகளை எதிர்கொண்டு சனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வழக்கறிஞர் பி.வி.பக்தவத்சலம் தலைமையில் OCDR (Organisation for the Protection of Civil Rights), வழக்கறிஞர் ஏ.எம். இப்ராகிம் தலைமையில் PUDR (Peoples Union for Demcratic Rights) ஆகிய அமைப்புகள் நிறுவப்பட்டன. PUDR -இன் முயற்சி காரணமாக திருப்பத்தூர் , தருமபுரி மாவட்டங்களில் நடத்தப்பட்டன ன காவல் துறை ஒடுக்குமுறைகள், என்கவுன்டர் சாவுகள் ஆகியன பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள அனைத்திந்திய அளவில் ஓர் உண்மை அறியும் குழு அமைக்கப்பட்டது. அதில் பியூசிஎல் உள்பட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், எந்த அமைப்பையும் சேராத பத்திரிகையாளர்கள் ஆகியோர் இருந்தனர்.

1980 அக்டோபர் மாதம் அக்குழு திருப்பத்தூர் சென்ற போது அங்கு சீருடை அணியாத காவல் துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டது. அவர்களது கைக்கடிகாரங்களும் பிற உடைமைகளும் அபகரிக்கப்பட்டன. அடியும் உதையும் பட்ட கிளாட் ஆல்வாரசின் காமிரா கைப்பற்றப்பட்டது. இந்தியாவின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான மோகன்ராமின் முகமும் கைகளும் வீங்கிப் போகும் அளவுக்கு அவர் மீது வன்முறைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

உண்மை அறியும் குழுவினர் சென்னைக்குத் திரும்பிவந்த பிறகு அப்போது பியூசிஎல் அமைப்பின் தமிழ்நாட்டுக் கிளையின் தலைவராக இருந்த துக்ளக் சோ ராமசாமி, பத்திரிகையாளர் கூட்டமொன்றைக் கூட்டி காவல் துறையால் தாக்கப்பட்டவர்களைப் பேச வைத்ததுடன், அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரனுக்கு திருப்பத்தூர் நிகழ்ச்சிகளைக் கண்டனம் செய்தும் அது தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுத்தும் ஒரு பகிரங்கக் கடிதத்தை அனுப்பினார்.

**தலையங்கம் தொடர்ச்சி...**

நிலம் கையகப்படுத்துதல் சட்டம் ஒன்றையும் திமுக அரசு நிறைவேற்றியுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்மிடாலம், மிடாலம், இனயம் போன்ற பல்வேறு பகுதிகளில் 1144.06 ஹெக்டேர் (2,827 ஏக்கர்) நிலப்பரப்பில் மோனோசைட், சிர்கான், இல்மனைட் போன்ற அரியமணல் வகைகளை அகழ்வு செய்வதற்கு ஒன்றிய, மாநில அரசுகள் திட்டமிட்டுள்ளன. இவையெல்லாம் கார்ப்பரேட்டுகளுக்கான திட்டங்கள். இந்தத் திட்டங்களும் கூட ஒன்றிய அரசால் கொண்டுவரப்படுகிறது என்று செந்தில் பாலாஜி போல மற்ற அமைச்சர்கள் கூறலாம். தமிழ்நாட்டு மக்களை அழிக்க இந்த திட்டங்களை அனுமதித்தால் தமிழ்நாட்டில் எதற்காக ஒரு அரசு என்று மக்கள் கேட்கத்தான் செய்வார்கள். இப்படி கார்ப்பரேட்டுகள் கொள்ளையடிக்க திமுக அரசு அனுமதிக்கக் கூடாது. ஏற்கனவே தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டிற்குக் காரணமானவர்கள் என்று நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் குற்றம் சாட்டிய பின்னரும் இதுவரை திமுக அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருவது, வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயல் அல்லவா. இதுபோன்ற மக்கள் விரோத கார்ப்பரேட் ஆதரவுத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டால் தமிழ்நாடு சுடுகாடாகும். கார்ப்பரேட் எதிர்ப்பு போராட்ட மரபு கொண்ட தமிழக மக்கள் கொடிய கார்ப்பரேட் திட்டங்களை எதிர்த்து போராடுவார்கள். வெற்றி பெறுவார்கள்!

தமிழ்நாட்டில் காவல் துறை ஒடுக்குமுறை பரவலாக இருந்ததைக் கருத்தில் கொண்டு பியூ,சி.எல், அமைப்பின் தேசியக் கவுன்சிலின் மாநாடு 1980இல் சென்னையில் நடைபெற்றது. சோ.ராமசாமி அவர்கள் கொண்டு வந்த ஒரு தீர்மானத்தை மாநாட்டுப் பிரதிநிதிகள் காரசாரமாக விவாதித்தனர். அத்தீர்மானம் என்னவென்றால் பியூசிஎல் அமைப்பு அரசு வன்முறையை மட்டுமல்லாது, அரசுக்கு வெளியே இருந்து செயல்படும் அமைப்புகளின் (non state actors) வன்முறைச் செயல்பாடுகளையும் கண்டனம் செய்ய வேண்டும் என்பதாகும். அவரது தீர்மானத்துக்கு ஆதரவாக மிகக்குறைந்த வாக்குகளே கிடைத்தன. அதன் பிறகு அவர் ஜனநாயகத்தில் தனக்கு நம்பிக்கை உள்ளதால் பெரும்பான்மையினரின் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாகக் கூறினார். ஆனால் சில வாரங்களுக்குப் பிறகு பியூசிஎல் அமைப்பிலிருந்து அவரும் பொதுச் செயலாளராக இருந்த பேராசிரியர் பிருந்தாவன் மோசசும் பதவி விலகினர். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையில் பாரிஸ்டர் இராமச்சந்திரன் , சாஸ்திரி இராமச்சந்திரன் ஆகியோர் முறையே தலைமைப் பொறுப்பையும், பொதுச் செயலாளர் பொறுப்பையும் ஏற்றனர்.

பின்னர் திருப்பத்தூர், தருமபுரி பகுதிகளுக்குச் சென்று உண்மைகளை அறிந்து வருவதற்காக கே.ஜி.கண்ணபிரான், சுவாமி அக்னிவேஷ், சோசலிஸ்டுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மிருணாள் கொரே உள்ளிட்ட உயர்மட்டக் குழு சென்று, நக்சலைட்டுகள், அவர்களது ஆதரவாளர்கள் ஆகியோரைச் சந்தித்துத் தகவல்களைச் சேகரித்து வந்தது. அவர்கள் தயாரித்த அறிக்கை, காவல் துறையினரின் கண்மூடித்தனமான வன்முறையையும் என்கவுன்டர் என்ற பெயரால் நக்சலைட்டுகள் கொல்லப்படுவதையும் கண்டனம் செய்ததுடன், இது குறித்த சுயேச்சையான விசாரணை ஆணையத்தை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு விடுத்தது.

கெடுவாய்ப்பாக பாரிஸ்டர் இராமச்சந்திரன் எதிர்பாராத வகையில் காலமாகிவிட்டதால் சென்னையிலிருந்த மூத்த வழக்குரைஞர் சங்கரன், பியூசிஎல், தமிழ்நாட்டுக் கிளையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு சாஸ்திரி இராமச்சந்திரன் வேறு ஒரு ஊருக்கு மாற்றலாகிச் சென்று விட்டதால், ஹென்றி திஃபேன் பொதுச் செயலாளரானர். அதன் காரணமாக பியூசிஎல் அமைப்பின் தமிழ்நாட்டுக் கிளை மதுரையை மையமாகக் கொண்டு செயல்படத் தொடங்கியது.

1982 அக்டோபரில் அது மதுரையில் காவல் துறை ஒடுக்குமுறையைப் பற்றி 15 நாள் விவாதங்களை நடத்தியது. அந்த விவாதங்கள் நடந்து முடிந்த அன்று வி.எம்.தார்குண்டேவும் கே.ஜி. கண்ணபிரானும் தமிழ்நாடு பியுசிஎல் ஏற்பாடு செய்திருந்த பேரணியைத் தொடங்கிவைத்து பின்னர் பொதுக்கூட்டத்தில் சிறப்புரை ஆற்ற அழைக்கப்பட்டிருந்தனர். பேரணிக்கு ஏற்கெனவே காவல் துறையின் அனுமதியை பெற்றிருந்த போதிலும் மாவட்டக்காவல்துறையினர்பேரணியில் கலந்துகொண்டவர்கள் மீது கண்மூடித்தனமாக லத்திகளால் அடிக்கத் தொடங்கினர். தடியடிபட்ட தார்க்குண்டே/வும் கே.ஜி.கண்ணபிரானும் கைது செய்யப்பட்டுக் காவல் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் எத்தகைய ஆளுமைகள் என்பதை அறிந்த முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அரசாங்கம் அவர்கள் இருவரையும் அடுத்த நாளே விடுதலை செய்தது.

அதன் பிறகு பியூசிஎல் தமிழ்நாட்டுக் கிளையின் நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டது. ஆனால் அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் சிலர் தனிப்பட்ட முறையில் மனித உரிமைச் செயல்பாடுகளில் ஈடுபட்டனர். பின்னர் 1989-90இல் மனித உரிமைப் பிரச்சினை தொடர்பாகச் சென்னைக்கு வந்திருந்த காலஞ்சென்ற முனைவர் கே.பாலகோபாலின் ஆலோசனைகளின் பேரில் பி.யு.சி.எல்.மீண்டும் செயல்படத் தொடங்கியது. அப்போது பல இளம் வழக்குரைஞர்கள், ஓய்வுபெற்ற பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் பியூசிஎல். அமைப்பில் சேரத் தொடங்கினர், இந்த அமைப்பின் கிளை பாண்டிச்சேரியிலும் உருவாக்கப்பட்டது.

வெறும் காவல் துறை மீறல்களை மட்டும் எதிர்த்துக் களமாடுவதோடு நின்று விடாமல், சமூகத்தின் பல்வேறு பிரச்சனைகளுக்காகவும் பியூசிஎல் அமைப்புத் தனது செயல்பாடுகளை விரிவாக்கியது. குறிப்பாகப் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளைக் கண்டித்துச் சென்னையில் இரண்டு நாள் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேனாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் மகன் முனைவர் கோபால் அவர்கள் பியூசிஎல் கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

தற்பொழுது எவ்விதத் தடையுமின்றி சிறப்பாகச் செயல்பட்டு வரும் பியூசிஎல் போன்ற மனித உரிமை அமைப்புகளுக்கு இன்றைய சூழல் மிகப்பெரும் சவாலாக அமைந்துள்ளது. இருப்பினும் பியூசிஎல் அமைப்பு அதைத் துணிவுடன் எதிர்கொண்டு உயிர்ப்புடன் தொடர்ந்து செயலாற்றும் என்ற நம்பிக்கை உள்ளது" எனத் தனது உரையை நிறைவு செய்தார் எஸ்.வி.ஆர். அவர்கள்.

# தேர்தல் வெற்றியுடன் திரும்ப வந்திருக்கும் டிரம்ப் - படிப்பினைகளும் சவால்களும்

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் தோல்வியைத் தழுவினார். அதனைத் தொடர்ந்து ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயற்சித்தார். அதுவும் தோல்வியைத் தழுவியது. அதன்பிறகு தற்போது நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று திரும்பவும் ஆட்சிக் கட்டிலில் ஏறியுள்ளார். அதுவும் கடந்த இருபதாண்டுகளில் குடியரசு கட்சி பெற்றிராத வியத்தகு வெற்றியுடன் இதனை அரங்கேற்றியுள்ளார். பரந்த மக்கள் நேரடியாக அளித்த வாக்கின் அடிப்படையிலும் வெற்றிபெற்ற குடியரசு கட்சியின் முதல் அதிபராகவும் அவர் மாறியுள்ளார். இதன்மூலம் குடியரசு கட்சி செனட்டிலும் காங்கிரசிலும் தனது கட்டுப்பாட்டைப் பெற்றுள்ளது. இது டிரம்ப் 1.0-வை விட டிரம்ப் 2.0 வை அதிக வலிமை உடையதாக்கும். அதன்மூலம் அவரது வெறித்தனமான இனவாத, ஏகாதிபத்திய வலதுசாரி நிகழ்ச்சி நிரலை தீவிரமாக மேற்கொள்ள மேலும் கூடுதல் சாதகமான நிலைமையை அவருக்கு வழங்கும். ஜனநாயக கட்சியைப் பொறுத்தவரையில், இந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவாகவே அவர்களது மிகமிக மோசமான தோல்விகளில் ஒன்றாகும். டிரம்ப்புடன் நிகழ்ந்த மூன்று அடுத்தடுத்த போட்டிகளில் இதுதான் ஜனநாயக கட்சியின் இரண்டாவதும், மிகவும் தீர்மானகரமான, ஒருங்கிணைந்த தோல்வியுமாகும். அமெரிக்க மக்கள், டிரம்ப் அதிபர் பதவியும் அதன் பேரழிவு தரவல்ல பின்விளைவுகளுக்கும் தாக்கங்களுக்கும் ஒரு திறன்மிக்க பதிலை தற்போது கண்டுபிடித்தாக வேண்டும். ஜனநாயக கட்சியின் வரம்புக்குட்பட்ட, வீழ்ந்து கொண்டிருக்கும் வலிமைக்கப்பால் இதனை அவர்கள் தேடியாக வேண்டும்.

2020 இல் டிரம்பின் குறுகிய தோல்விக்கு அவர் பெருந்தொற்றை தவறாகக் கையாண்ட விதம் முக்கியப் பங்காற்றியது. இந்த முறை ஜனநாயக கட்சியின் தோல்விக்கு பிடன்-ஹாரிஸ் நிர்வாகத்தின் மோசமான பொருளாதார சாதனை காரணமாகியது. பெருந்தொற்றுக்குப் பிந்தைய பெரும பொருளாதாரத்தின் மீட்சி குறித்த புள்ளியியல் கூற்றுகள் அதிகரித்துவரும் வாழ்க்கை செலவு, தேங்கிப்போன வருமானம் ஆகியவற்றுக்குக் கீழே தள்ளாடிக் கொண்டிருந்த அமெரிக்க உழைக்கும் மக்களிடையே சிறு அசைவை மட்டுமே ஏற்படுத்தியது. அதிகரித்த வறுமை, வீடின்மை, ஆழமான சமூக, பொருளாதார பாதுகாப்பின்மை ஆகியவற்றால் வாட்டப்பட்டு வதைபடும் பெருவாரியான மக்களைப் பற்றி குறிப்பிட வேண்டியதில்லை. தற்பெருமை கொண்ட ஜனநாயக கட்சியினர் உழைக்கும் மக்களின் கோபத்தையும் கவலைகளையும் போக்குவதைப் பற்றி கவலைப்படவில்லை. உழைக்கும் மக்களின் இந்தப் பாதுகாப்பின்மையை டிரம்ப் பரப்புரையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளவும், சட்ட விரோதமாக புலம் பெயர்ந்தவர்கள் என்ற பூச்சாண்டிக்கு எதிராக இந்தப் பாதுகாப்பின்மையை நிறுத்தவும் ஜனநாயக கட்சியினர் தவறவிட்டுவிட்டனர். இதன் முடிவுகள் இந்த ஒட்டுமொத்த உலகத்தின் கண்களுக்கும் தற்போது காணக் கிடைக்கிறது. அமெரிக்க மக்கள் ஏற்கனவே டிரம்ப் 1.0 இன் கசப்பை அனுபவித்துள்ளனர். தற்போது டிரம்ப் 2.0 வின் வடிவிலான மிகப்பெரிய பேரழிவை எதிர்கொள்ளும் பாதுகாப்பற்ற நிலையில் அவர்கள் உள்ளனர்.

பெருமளவிலான எண்ணிக்கையில் புலம் பெயர்ந்தவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவது என்ற அவரது வாக்குறுதியை நிறைவேற்றுவதே டிரம்பின் மிகப்பெரிய நிகழ்ச்சி நிரலாகும். மிகப்பெரிய அரசு எந்திரத்தை ஈடுபடுத்தியும் மிகத் தொன்மையான அன்னிய எதிரிகள் சட்டம் 1798 உள்ளிட்ட அனைத்து வகைப்பட்ட சட்டங்களையும் பயன்படுத்தியும் அவர் இதனை அமல்படுத்த முயற்சிப்பார். கோடிக்கணக்கான மக்கள் இதற்கு இலக்காவார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அமெரிக்கக் கூட்டாட்சி முறையின் நிறுவனக் கட்டமைப்புத் தடுப்புகளைக் கணக்கில் கொண்டால் இந்த அளவிற்கு மக்களை வெளியேற்றுவது அவ்வளவு எளிதாக செய்ய முடியக் கூடியதல்ல. ஆனால் இதன்மூலம் கட்டவிழ்த்து விடப்படும் அன்னிய வெறுப்பு, இனவெறிவாதம், இஸ்லாமிய வெறுப்பு ஆகியவற்றால் கறுப்பர்கள், முஸ்லிம்கள், வெள்ளையர் அல்லாதவர்கள், பொதுவாக புலம் பெயர்ந்தவர்கள் ஆகியோர் வெள்ளை மேலாதிக்கவாத வெறுப்பினாலும் வன்முறையினாலும் பாதிப்புக்குள்ளாவார்கள். முதலில் 2016 இல் ஹிலாரி கிளின்டன் மீதும் எட்டாண்டுகளுக்குப் பிறகு தற்போது கமலா ஹாரிஸ் மீதும் அவர் அப்பட்டமான பெண் வெறுப்பு அரசியலை மேற்கொண்டார். இத்தகைய பெண் வெறுப்பு அரசியலுடன் டிரம்பிற்கு கிடைத்த இந்த வெற்றி அமெரிக்க அரசியலில் ஆழமாகப் படிந்துள்ள ஆணாதிக்க சிந்தனையையும் நன்கு வெளிப்படுத்துகிறது.

அமெரிக்க அதிபர் தேர்தலின் முடிவுகள் உலகம் முழுவதற்கும் தொடர்ந்து நிச்சயமான எதிர் விளைவுகளை ஏற்படுத்துகின்றது. பல்லாண்டுகளாக அதன் பொருளாதாரம் சரிவை சந்திக்கிற போதிலும் அமெரிக்கா, உலகின் மிகப்பெரிய இராணுவ வல்லரசாகத் தொடருகிறது. மேலும் உலகை மேலாதிக்கம் செய்யும் அதன் கொள்கைகள் உலகம் முழுவதும் போர்களை, இனப்படுகொலைகளை, அடக்குமுறை ஆட்சிகளை வழங்குகிற அதன் அரசியல்-இராணுவ போர்த்தந்திரத்தை சுற்றிச் சுழலுகிறது. ஜனநாயக வாக்காளர்களின் ஏமாற்றத்திற்கு

முக்கியக் காரணம் என்னவென்றால், இந்தத் தீவிர ஏகாதிபத்திய, மேலாதிக்கவாத வெளியுறவுக் கொள்கையில் குடியரசு கட்சியினருக்கும் ஜனநாயகக் கட்சியினருக்கும் இடையேயுள்ள இருதரப்பு ஒப்பந்தமாகும். இது இஸ்ரேல் மூலம் பாலஸ்தீனியர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதில் வெளிப்படுகிறது. தேர்தல் பரப்புரை இயக்கத்தின் போது கூட முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் காசாவில் நடத்தப்படும் இனப்படுகொலையை நியாயப்படுத்தினார். அதனை 'வேறுவழியில்லாத' இஸ்ரேலின் எதிர்வினை என்கிறார். அதனை வரவழைத்து கொண்டதற்காக ஹமாஸ் இயக்கத்தினர் மீது குற்றம் சுமத்துகிறார். ஜனநாயகக் கட்சியினருக்கு பரந்த மக்கள் நேரடியாக அளித்த வாக்கின் எண்ணிக்கை 2020 இல் 8.1 கோடி என்பதிலிருந்து 2024 இல் 7 கோடியாக குறைந்து போனது குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை தான்.

இந்தியாவில் சங்கிப் படையினரும் மோடி ஆதரவு அமெரிக்க வாழ் இந்தியர்களும் டிரம்புக்கு உரத்த ஆதரவாளர்களாக உள்ளனர். டிரம்ப் வெள்ளை மாளிகைக்கு திரும்பவும் வந்துள்ளதால் அவர்கள் அதீத மகிழ்ச்சி அடைந்துள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஏற்கனவே புலம்பெயர்ந்து சென்றவர்களும் புலம்பெயர்ந்து செல்ல விருப்பம் உள்ளவர்களும் டிரம்பின் குடியேற்ற எதிர்ப்பு கொள்கைகளுக்கும் அரசியலுக்கும் முதன்மை குறியாக உள்ளனர். இருந்த போதிலும் கூட மோடி அரசாங்கம் அதே வாய்ச்சவடாலை தானும் செய்ய முயற்சிக்கிறது. அதேபோன்ற செயல்திட்டத்தை இந்தியாவில் மேற்கொள்ளவும் அது விரும்புகிறது. நவ அடிப்படைவாத சமூக செயல்திட்டம், நவ தாராளவாத பொருளாதார திசைவழி, பாசிச ஆட்சி முறை ஆகியவை இன்றைய உலகில் உலகளாவிய அதிதீவிர வலதுசாரிகளின் வரையறையாக உள்ளன. இவற்றை செயல்படுத்துவதிலும் பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் நடத்தும் இனப்படுகொலைப் போருக்கு வழங்கும் ஆதரவின் அடிப்படையிலும்,




நீண்டகால நோக்கிலான இந்திய-அமெரிக்க கூட்டுறவுக்கு அச்சாணியாக டிரம்ப்-மோடி இடையேயான நல்லிணக்கம் திகழும்.

அமெரிக்கா, இந்தியா ஆகிய இரு நாட்டிலுமுள்ள ஜனநாயக சக்திகளுக்கும், சமூக, பொருளாதார, காலநிலை நீதிக்கான சக்திகளுக்கும் ஜனநாயகக் கட்சியின் தோல்வி, டிரம்பின் வெற்றியிலிருந்து கற்றுக்கொள்ள முக்கிய பாடங்கள் உள்ளன. பாசிச சக்திகள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட வேண்டுமானால் அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலிருந்து அவர்களை விலக்கி வைக்க வேண்டுமானால், ஜனநாயகம் குறித்து ஆசை வார்த்தைகளைக் கூறுவதோடு மட்டுமே பாசிச எதிர்ப்பு அரசியல் சுருங்கிப் போய்விடக் கூடாது. மாற்றத்திற்கான பார்வைகளில், முன்னுரிமைகளில் பாசிச எதிர்ப்பு நங்கூரமிட்டுக் கொண்டிருக்க வேண்டும். மேலும் அமைதி, நீதி, மானுட நல்வாழ்வு, மனித உரிமைகள் ஆகியவற்றுக்கான பரந்துபட்ட மக்களின் தேடலில் இருந்து பாசிச எதிர்ப்பு ஆற்றலை வரவழைத்து கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே பாசிச எதிர்ப்பு வெற்றிபெற முடியும். டிரம்ப், மோடி, நெதன்யாகு என்ற மூவர் கூட்டணி ஏகாதிபத்தியம், இனப்படுகொலை, அந்நியர் வெறுப்பு, கார்ப்பரேட் கொள்ளை, சர்வாதிகார ஆட்சி ஆகிய பேரழிவுகளின் தொகுப்பை நம்மீது சுமத்த வரும். எனவே உலகம் முழுவதிலும் உள்ள ஜனநாயக சக்திகள், இந்த பேராபத்தான பாதையிலிருந்து இந்த உலகைக் காப்பாற்ற ஒருமைப்பாட்டுணர்வுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வளர்த்தெடுக்க வேண்டும்.

தமிழில்: செந்தில்

5ஆம் பக்க தொடர்ச்சி...

**தொழிலாளர் உரிமையை மீட்டெடுப்போம்!**

உரிமைகள், சமூகப் பாதுகாப்பு, கவுரவம் மற்றும் சமத்துவத்துக்காகப் போராடுவோம்!

தொழிலாளர் சட்டத் தொகுப்புகள், புதிய கிரிமினல் சட்டங்களை நீக்குவதற்காக, தனியார்மயத்தை தடுத்து நிறுத்துவதற்காகப் போராடுவோம் !

கவுரவமான வேலை, ஊதியம், பழைய பென்சன் திட்டத்திற்காகப் போராடுவோம்!

ஜனநாயகத்தையும் அரசமைப்புச் சட்டத்தையும் உயர்த்திப் பிடிப்போம்!

ஆளும் வர்க்கத்தின் முகவரான பாசிச மோடி இராஜ்ஜியத்தை எதிர்த்துப் போராடுவோம்!

ஏஐசிசிடியு வின் 11ஆவது அகில இந்திய மாநாட்டை பெரும் வெற்றி பெறச் செய்வோம்!

**அகில இந்திய தொழிற்சங்க மையக் கவுன்சில் (ஏஐசிசிடியு)**
**All India Central Council of Trade Unions – AICCTU – தமிழ்நாடு.**
**3/254 B; ஜீவா தெரு; வண்டலூர்; சென்னை – 600048**
**aicctutamilnadu@gmail.com தொடர்புக்கு : 98403 40741**

# அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் (AILAJ) தமிழ்நாடு மாநில முதல் பொதுப் பேரவை

அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்சங்க (அய்லாஜ்) த்தின் தமிழ்நாடு மாநில முதல் பொதுப்பேரவை 16.11.2024 அன்று சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள பேச்சுரிமை அரங்கத்தில் நடைபெற்றது. மனித உரிமைப் போராளி பேராசிரியர் ஜி.என்.சாய்பாபா, பல்வேறு சம்பவங்களில் படுகொலைக்குள்ளான வழக்கறிஞர்கள், உத்தரப்பிரதேச அரசின் மோசமான நிர்வாகத்தினால் மருத்துவமனையில் தீ பிடித்ததில் அநியாயமாக இறந்துபோன பச்சிளம் குழந்தைகள் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்திற்கு அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கத்தின் மத்தியக்குழு உறுப்பினர் உ.அதியமான் தலைமை தாங்கினார். அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் ஜி.ரமேஷ் துவக்கவுரையாற்றினார். அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் கிளிப்டன் டி ரொசாரியோ சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு புதுச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டுக் குழு (ஜாக்) அமைப்பின் மாநிலத் துணைத் தலைவர் முருகேசன் வாழ்த்துரை வழங்கினார். அய்லாஜ் மாநிலக் குழு உறுப்பினர்கள் தேசிகன், ரவிக்குமார், ராஜ்குமார், ஜெயசீலன், ராஜசங்கர் , நடராஜன் மற்றும் பல வழக்கறிஞர்கள் தங்கள் கருத்துகளை முன்வைத்துப் பேசினர். இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி, ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் சொ.இரணியப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 21 பேர் மாநிலக் குழு தேர்வு செய்யப்பட்டது. ஒன்றிய பாஜக அரசு ஜனநாயக விரோதமாக அமல்படுத்தியுள்ள மக்கள் விரோத மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும், அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் முன்வைத்துள்ள வரைவு வழக்கறிஞர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் வழக்கறிஞர் பாதுகாப்புச் சட்டத்தை ஒன்றிய, மாநில அரசுகள் உடனடியாக நிறைவேற்றி அமல்படுத்திட வேண்டும், டிசம்பர் 21-22 தேதிகளில் ஒடிசா மாநிலம் கடாக்கில் நடைபெறவிருக்கும் அய்லாஜின் 2வது அகில இந்திய மாநாட்டை வெற்றிபெறச் செய்யவேண்டும், தமிழ்நாட்டில் அய்லாஜை வழக்கறிஞர் சமூகத்தின் முதன்மையான சங்கமாக மாற்றிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.






# கொடூரமான; மக்கள் விரோதமான புதிய குற்றவியல் சட்டங்களை திரும்பப் பெறு!

## ஜாக் (JAAC) நடத்திய தென்னிந்திய வழக்கறிஞர்கள் மாநாடு

பாஜக அரசு அராஜகமாக, ஜனநாயகமற்ற முறையில் கொண்டுவந்துள்ள கொடூரமான, மக்கள் விரோதமான புதிய மூன்று குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் வழக்கறிஞர்கள் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றக் கோரியும் சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் 17.11.2024 அன்று தென்னிந்திய வழக்கறிஞர்கள் மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் கிளிப்டன் டி ரொசாரியோ, இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி உரையாற்றினார்கள். அய்லாஜ் சார்பாக அகில இந்திய துணைத் தலைவர் ஜி.ரமேஷ், மத்தியக்குழு உறுப்பினர் உ.அதியமான் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் து.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஹரிபரந்தாமன், உச்சநீதிமன்ற வழக்கறிஞர் காலின் கன்சால்வ்ஸ், தமிழர் வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், தமிழ்நாடு சட்ட அமைச்சர் ரகுபதி, திமுக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி உள்ளிட்ட பலர் உரையாற்றினார்கள். ஆந்திரா, கர்நாடகா, கேரளா மாநிலங்களில் இருந்து வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

# அமரன்:வணிகமாக்கப்படும் தேசபக்தி!

**– கோபி நயினார் (அறம் பட இயக்குநர்)**

வழக்கமான சினிமான்னு தான் போய்ப்பார்த்தேன். பார்த்த பின்புதான் மோசமான சினிமாவைப் பார்த்து விட்டேன் என்ற அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. இந்தப்படம் சிறப்பாக இருந்தது, லட்சோப லட்சம் காஷ்மீர் மக்களின் கண்ணீரோடு என்று சொல்கிறேன்.

அமரன் படம் முகுந்த் வரதராஜனின் வாழ்க்கை சினிமா என்று சொல்கிறார்கள். இந்த படத்துக்காக அவரது குடும்பத்தினரை சந்தித்து பேசியதாக கூறுகிறார்கள். நல்லது. காஷ்மீர் மக்களை சந்தித்தீர்களா? காஷ்மீர் வெறும் நிலம் மட்டுமா? அங்குள்ள மக்களுக்கு கண்ணீரும் வாழ்க்கையும் இருக்கிறதல்லவா? அவர்கள் தரப்பு நியாயம் சொல்லப்பட்டிருக்கிறதா?

வீரப்பனைப் பற்றி ஒரு படம் எடுக்க விரும்புகிறேன். அந்த பகுதிக்குச் சென்று அந்த மக்களை சந்திக்கிறேன். அங்குள்ள மக்கள் அவர்கள் அனுபவித்த கண்ணீர்கதைகளை கூறுகிறார்கள். பெண்கள் பாலியல் வன்முறை பற்றி சொல்கிறார்கள். இவற்றைக் கேட்டு என் மனம் மாற்றமடையுமல்லவா? ஒரு உண்மை பிரச்சனையில் எப்போதும் இரண்டு தரப்பு இருக்கும். நான் ஒரு தரப்பை மட்டும் கூறமுடியுமா? வீரப்பனைப் பற்றிய அரசு சொல்லும் தகவல்களே திரைப் படமாக மாறும் என்றால் அது நியாயமா? அது ஒரு கலைஞன் சொந்த மக்களுக்கு செய்யும் துரோகம்.

படைப்பு சுதந்திரம் என்று கூறுகிறார்கள். படைப்பு சுதந்திரம் என்றால் நாம் என்னவேண்டுமானாலும் பேசலாம் என்ன வேண்டுமானாலும் எடுக்கலாமா? படைப்புசுதந்திரம் வரையறைக்கு உட்பட்டது.

உங்கள் மாட்டை விற்கிறீர்கள் அது வியாபாரம். பக்கத்து வீட்டு மாட்டை விற்கின்றீர்கள் என்றால் அதன் பெயர் என்ன? குற்றம். நீங்கள் உங்கள் கதையை படமாக எடுங்கள் அது உங்கள் சுதந்திரம். அடுத்தவர் கதையை எடுக்கும் போது அது உண்மையாக இருக்க வேண்டும். உண்மையை மட்டும்தான் எடுக்க வேண்டும். அதுதான் பொறுப்புள்ள ஒரு கலைஞனின் வேலை. இந்தப் படம் உண்மையை பேசவில்லை. காஷ்மீர் பற்றி அரசு உருவாக்கிவைத்துள்ள அரசியலையே இந்தப் படம் பேசுகிறது.

நான் இந்த படத்தை எடுத்திருந்தால் எப்படி எடுத்திருப்பேன் என்று கேட்கிறீர்கள். நான் இந்த படத்தை எடுத்திருக்க மாட்டேன். ஏனெனில் உண்மையை பேசமுடியாது. அரசியலை அறிவியல் பூர்வமாக பேசும் போது இந்த நாடு கண்காணிக்கிறது. பின் எப்படி உண்மையை பேசமுடியும்?

பொழுதுபோக்கு என்கிறார்கள். எது பொழுது போக்கு? ஆபாசம் பொழுதுபோக்கா? வன்முறை பொழுதுபோக்கா? சமூகத்தைப் பற்றிய பொய்களை படமாக எடுக்கலாமா? ஆபாசம், வன்முறை சமூகத்தின் தேவையா? மதம், சாதி பற்றி அதிலுள்ள முரண்பாடுகளைப் பற்றி படம் எடுக்காதே என்கிறார்கள். ஆனால் ஆபாசம், வன்முறை பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் எடுக்கலாமென்கிறார்கள். இங்கு குழந்தைகளுக்கான படங்கள் வருகிறதா? பெண்களை மதிக்கும் படங்கள் வருகிறதா?



(முகுந்த் வரதராஜனை) ஏன் பிராமணராகக் காட்டவில்லை என்று சிலர் கேட்கிறார்கள்? அவர் பிராமணரா? ராணுவ வீரரா? இந்தியரா? என்ற கேள்வி எழுகிறது. அவரை இந்தியராக காட்டவிரும்புகிறோம் என்று படக்குழுவினர் சொல்கின்றனர். அதுவல்ல உண்மை. பொதுச்சமூகத்திடம் ஒரு படத்தை கொண்டு செல்லும்போது, குறிப்பிட்ட ஒரு அடையாளத்தைக் காட்டினால் மற்றவர்கள் “நாம் ஏன் அதை பார்க்க வேண்டும்” என்று தோன்றுமல்லவா? எனவே ‘தேச பக்தி’ வணிகமாக்கப் பட்டிருக்கிறது. அதனால்தான் தேசபக்தி என்றாலே அச்சமாக இருக்கிறது.

இந்தப்படம் குறித்து மாரிசெல்வராஜ் பாராட்டியிருப்பது வருத்தமளிக்கிறது. தலித்துகள் ஒடுக்கப்படுவதை பேசுவதுபோல் இஸ்லாமியர்கள், பெண்கள் ஒடுக்கப்படுவதையும் பேசவேண்டும். அதுதான் ஜனநாயகம்.....

இந்த படம் குறித்த எனது பதிவு பற்றி படக்குழுவினர் எவரும் என்னிடம் பேசவில்லை. ஆனால் பல ஜனநாயக சக்திகள் எனது பதிவை ஆதரித்துப் பேசினர். “சாய்பல்லவி, சிவகார்த்திகேயன் நடிப்பையே கவனித்தோம்; இந்த படத்தில் உள்ள அரசியலை கவனிக்க வில்லை” என்று கூறினர்.

***(இயக்குநர் கோபி நயினாரின் புதிய தலைமுறை தொலைக்காட்சி பேட்டியிலிருந்து – முருகன்)***



# நவம்பரின் முக்கியமான தேர்தல் போராட்டங்கள்

*தமிழில்: செந்தில்*

ஹரியானாவில் ஆச்சரியமளிக்கும் விதத்தில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றிபெற்றத்தில் ஊக்கம் பெற்றுள்ள சங்கிகள் படை மகாராஷ்டிராவில் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் ஜார்க்கண்ட்டில் வெற்றி பெறுவதற்கும் அனைத்து முயற்சிகளையும் செய்யத் தொடங்கிவிட்டது. ஒவ்வொரு சட்டமன்றத் தேர்தலிலும் “ வளர்ச்சி’க்காக ‘இரட்டை எஞ்சின்’ அரசாங்கத்தை உறுதிப்படுத்துங்கள்” என்பதே பாஜகவின் செல்ல முழக்கமாகும். ஆனால் இரட்டை எஞ்சின் என்ற வாய்ச்சவடாலை இனிமேலும் எவரும் கேட்கமாட்டார்கள் என்பதையும் அந்தக் கட்சி நன்றாகவே அறிந்து வைத்துள்ளது. மணிப்பூரில் ஆட்சி நிர்வாகம் முற்றிலும் சீர்குலைந்து போய் விட்டது; பீகாரில் குற்றச் செயல்களும் ஊழல்களும் அதிகரித்து வருகின்றன; உபி, உத்தர்கண்ட் முதல் அசாம், திரிபுரா வரை அனைத்து ‘முன்மாதிரி’ பாஜக ஆளும் மாநிலங்களிலும் அரசமைப்புச் சட்டக் கோட்பாடுகள், உரிமைகள் மீது அப்பட்டமான தாக்குதல்கள் நடத்தப்படுகிறது. இப்படியாக ஒரு மாநிலத்திற்கு பின் இன்னொரு மாநிலம் என ‘இரட்டை எஞ்சினால்’ இயக்கப்படும் ஆட்சிகள் இருப்பதைக் காணலாம். இருப்பினும் பாஜகவின் தேர்தல் பரப்புரையில் கட்டுப்பாடு இல்லாமல் முஸ்லிம் எதிர்ப்பு வெறுப்புப் பிரச்சாரமே கட்சியின் மூத்த பிரச்சாரப் பொறுப்பாளர்களால் நேரடியாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. பாஜகவின் உண்மையான தேர்தல் பரப்புரை உத்தியானது இதைச் சுற்றியே இருக்கின்றது.

தேர்தல் நடத்தை விதிமுறைகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக செயல்படுத்தியிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் இந்தத் தேர்தல் காலத்திற்குள் பாஜக தனது அரசியல் அங்கீகாரத்தை இழந்து விட்டிருக்கும். ஹிமாந்த பிஸ்வா சர்மா, கிரிராஜ் சிங், மிதுன் சக்கரவர்த்தி, இன்னும் பலரால் ஒவ்வொரு நாளும் கக்கப்படும் விஷம் காரணமாக பாஜகவின் அரசியல் அங்கீகாரம் இந்நேரம் பறிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தக் கட்சி ஒரு காலத்தில் இந்துப் பெருமையை தனது ஆதாயத்துக்காக பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தது. அது தற்போது (இந்துக்கள்) பாதிக்கப்படுகிறார்கள் என்ற சீட்டைக் கொண்டு விளையாடுகிறது. வங்கதேச முஸ்லிம்களின் ஊடுருவலால் இந்தியாவிலுள்ள பெரும்பான்மை இந்து மக்களின் உயிருக்கு ஆபத்து என பூச்சாண்டி காட்டுகிறது. ‘பிரிந்திருந்தால் நீங்கள் கொல்லப்படுவீர்கள்’ என்பதே பாஜகவின் யுத்த ஓலமாகும். முஸ்லிம் ஆக்கிரமிப்பு அபாயத்திலிருந்து தப்பிப்பிழைக்க இந்துக்கள் அனைவரும் பாஜகவின் பின்னால் அணிதிரள வேண்டும் என்று சொல்கிறது. ஜார்கண்டில் ஹிமாந்த பிஸ்வா சர்மா முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களை பெயர் குறிப்பிட்டுச் சொல்லி அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள், கொள்ளைக்காரர்கள் என்று சொல்லி ஜார்க்கண்டின் புகழ்மிக்க சிதோ கானு, பிதாம்பர் - நிலாம்பர், பிர்சா முண்டா போன்றவர்களுக்கு எதிராக அவர்களை முன்னிறுத்துகிறார். பீகாரில் இந்துக்களின் ‘சுய மரியாதை’ என்ற பெயரில் கிரிராஜ் சிங் பயணம் மேற்கொள்கிறார். தங்களை பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொரு இந்துக் குடும்பமும் திரிசூலத்தை வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்கிறார்.

ஊடுருவல்காரர்கள், படையெடுப்பாளர்களாக முஸ்லிம்களை சாத்தான்மயமாக்கிக் கொண்டே அக்கம்பக்கமாக மாற்றுக் கருத்துடையவர்களை நிரந்தரமாக ‘நகர்ப்புற நக்சல்’களாக முத்திரை குத்தப்படுகிறார்கள். இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம் என்பது ‘நக்சலிசம்’ என தற்போது மோடி அரசாங்கத்தால் புதிய வரையறை கொடுக்கப்படுகிறது. சாதிவாரி கணக்கெடுப்பு என்ற நிகழ்ச்சிநிரலை கையில் எடுத்ததற்காகவும் அரசமைப்புச் சட்டத்தை பாதுகாப்போம் என்பதற்காகவும் காங்கிரசும் இந்தியா கூட்டணியும் ‘நகர்ப்புற நக்சல்’களை ஊக்குவிப்பதாக குற்றம் சாட்டப்படுகின்றன. எதிர்க்கட்சியினரை அச்சுறுத்தும் இந்த முயற்சிக்கு பின்னால், “தேச நலன்” என்ற பெயரில் பாஜகவின் நிகழ்ச்சிநிரலான இந்து மேலாதிக்க பெரும்பான்மை வாதம், கார்ப்பரேட்டுகளுக்கு சலுகைகளை வாரி வழங்குவது, நிறுவனமயமாக்கப்பட்ட ஊழல், சர்வாதிகார ஆட்சி ஆகியவற்றைச் செயல்டுத்தும் நோக்கம் உள்ளது. பாஜகவின் இந்த ஒட்டுமொத்த திட்டங்களிலும் மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் ஆகிய இரண்டுமே அதிமுக்கியத்துவம் வாய்ந்த மாநிலங்களாகும். மகாராஷ்டிராவில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பாஜக அரசமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு கோட்பாட்டையும் அறநெறிமுறைகளையும் உடைத்து நொறுக்குகிறது. ஜார்க்கண்டிலும் கூட மோடி அரசு, ஹேமந்த் சோரன் அரசாங்கத்தைக் கவிழ்க்க தந்திரங்களை ஒவ்வொன்றாக முயற்சித்துப் பார்த்தது. மாநில அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு தடை ஏற்படுத்தியது. ஆளுநர் அலுவலகத்தை அப்பட்டமாக ஒருபக்க சார்புடையதாக தவறாக பயன்படுத்துவதன் மூலம் ஜார்க்கண்டின் கூட்டாட்சி அதிகாரங்களை

வெட்டிச் சுருக்குகிறது. மக்களவைத் தேர்தல்களுக்கு முன்னதாக அம்மாநில முதலமைச்சரை சிறைக்கு அனுப்பியது. மேலும் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஜேஎம்எம் கட்சியின் முதுபெரும் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான சம்பை சோரனை பாஜகவில் சேர்த்துக் கொண்டதன் மூலம் ஜேஎம்எம் கட்சியில் பெரும் பிளவை உருவாக்கவும் முயற்சித்தது. சத்தீஸ்கர், ஒடிசா வெற்றிகளுக்குப் பிறகு ஜார்க்கண்டிலும் பாஜக அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டால் அது அதானி முக்கோணமாக மூன்று மாநிலங்களையும் கைக்குள் வைத்துக்கொள்ள முடியும் என்பதே பாஜவின் திட்டம். அந்த வகையில் மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் சட்டமன்றங்களுக்கு நடைபெற்ற தேர்தல்களும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற இடைத்தேர்தல்களும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

ஜார்கண்டின் அனைத்து 81 தொகுதிகளிலும் முழுமையான கூட்டணி ஏற்படுவதை, இந்தியா கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டு ஏற்பாடுகள் உறுதிசெய்ய இயலாமல் போனது ஒரு கெடுவாய்ப்பாகும். இககமாலெ ஜார்கண்டின் நான்கு தொகுதிகளில் மட்டுமே போட்டியிட்டது. அதிலும் கூட இந்த நான்கில் ஒரு தொகுதியில் ஜேஎம்எம் தனது வேட்பாளரை நிறுத்தியது. 2019 சட்டமன்றத் தேர்தல்களில் அந்த தொகுதியில் ஜேஎம்எம் ஆறாவது இடத்தையே பிடித்திருந்தது. அசாமிலும் கூட பெகாளி இடைத்தேர்தலில் 2019 சட்டமன்ற தேர்தல்களின் போதிருந்த புரிதல்களில் இருந்து விலகிச்சென்று இகக(மாலெ) வேட்பாளருக்கு எதிராக காங்கிரஸ் தனது சொந்த வேட்பாளரை நிறுத்தியது. அதுவும் கூட பாஜகவில் இருந்து விலகி வந்த ஒருவருக்கு மறுவாழ்வளித்ததன் மூலம் இதைச் செய்தது. மேற்கு வங்க மாநிலத்தின் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக, மாநிலத்தின் இடைத்தேர்தல் நடைபெறும் ஆறு தொகுதிகளில் ஒன்றில் இகக(மாலெ)விற்கு இகக(மா) ஆதரவு அளித்தது. அரசியலில், தேர்தலில் இடதுகளின் மீட்சியை துரிதப்படுத்துவதன் மூலம் மேற்கு வங்கத்தின் அரசியல் சமநிலையில் ஒரு மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு இடதுகளிடையே ஒரு பரந்த, கூடுதல் துடிப்பான ஒற்றுமை தேவைப்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

# சேலம் மாவட்டம், குறிச்சி ஊராட்சி மக்களுக்கு பட்டா கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி, 40 கி.மீ நடைபயணம்: தோழர்கள் கைது.




சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், குறிச்சி ஊராட்சி மக்கள், தாங்கள் வசித்து வரும் வீட்டுமனைகளுக்கு, பட்டா கேட்டு இரண்டாண்டு காலமாக தொடர்ந்து போராடி வருகிறார்கள். சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மற்றும் வருவாய் நிர்வாகம் பட்டா கொடுக்காமல் இழுத்தடித்து வருகிறது. எனவே, மாவட்ட ஆட்சியர் கவனத்திற்குக் கொண்டு செல்ல, கட்சி குறிச்சி உள்ளூர் கமிட்டி சார்பில், 15-11-2024 அன்று வெள்ளி காலை 10.00 மணியளவில், குறிச்சியில் இருந்து 40 கி.மீ சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்ல நடைபயணம் திட்டம் இடப்பட்டது. நடைபயணத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்தது; எனினும், தடையை மீறி சுமார் 80 பேர் அணிதிரண்டனர்.

குறிச்சி உள்ளூர் கமிட்டி செயலாளர் குபேந்திரன் தலைமையில், மாவட்ட செயலாளர் R. வேல்முருகன் மற்றும் மாநிலக்குழு உறுப்பினர் V.அய்யந்துரை மற்றும் மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் அன்பு, பாலு ஆகியோர் உரையாற்றிய பின்னர் நடைபயணம் துவங்கியதும் காவல்துறை சுமார் 50 பேரை கைதுசெய்து மண்டபத்தில் வைத்தது. பின்னர் மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.



## புதுச்சேரி பெண்கள் கழகங்கள் பரப்புரை

புதுச்சேரியில் சீரழிந்த சுற்றுலா, போதை கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் என்ஆர்காங்கிரஸ்- பாஜக கூட்டணி ஆட்சியினை கண்டித்து 21.11.2024 அன்று புதுச்சேரியில் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், இந்திய தேசிய மாதர் சம்மேளனம், அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் பரப்புரை இயக்கம் நடத்தின.

# பசித்தோருடன் ஆணவத்துடன் விளையாடிய பாஜக ஆட்சிக்கு பாடம் புகட்டிய மக்கள் போராட்டங்கள்!

– சோபா

பசித்தோருடன் ஆணவத்துடன் விளையாடிய பாஜக ஆட்சிக்கு பாடம் புகட்டிய மக்கள் போராட்டங்கள்.

1952 பொதுத் தேர்தலில் ஆட்சியைப் பிடித்த காங்கிரஸ் கட்சியால் வெளிச்சந்தையிலும் ,பொது விநியோகத் திட்டத்திலும் மக்களின் முக்கிய உணவுப் பொருளான அரிசியை குறைந்த விலையில் விநியோகிக்க முடியவில்லை. நாடு முழுவதும் 1960 களில் நகர்புரங்களில் பொது விநியோகத் திட்டம் பகுதி அளவில் துவங்கப்பட்டது.

1967 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 'ரூபாய்க்கு மூன்று படி அரிசி லட்சியம் ஒரு படி நிச்சயம்' என்ற முழக்கத்தை முன்வைத்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது அப்போதைய திராவிட முன்னேற்றக் கழகம். நியாய விலைக் கடைகளில் அரிசி விநியோகத்திற்கும் ஆட்சி க்கும் தொடர்பு இருப்பதை அப்பொழுதிலிருந்தே வரலாறு சுட்டிக் காட்டுகிறது.

அரிசி விநியோக அரசியல் வரலாறு ஒன்றிய பாஜக அரசுக்கு நன்கு தெரிந்தும் 2015 செப்டம்பரில் முதன்முறையாக பொது வினி யோகத் திட்டத்தில் உணவுப் பொருட்களுக்கு பதிலாக பணம் என்ற சோதனைக் கொள்கையை புதுச்சேரி ,சண்டிகார், தத்ரா நகர் ஹவேலி ஆகிய ஒன்றிய ஆட்சிப்பரப்புகளில் நடைமுறைப் படுத்தத்துவங்கியது .

புதுச்சேரி மாநிலத்தில் தற்போது 3,35,595 குடும்ப உணவு பங்கீட்டு அட்டைகள்உள்ளன. இலக்கு நிர்ணயம் செய்யப்பட்ட பொது விநியோகத்திட்டப்படி, (TPDS) இவற்றுள், வறுமைக்கோட்டின் கீழே வசிக்கக்கூடிய குடும்பங்களின் அட்டைகள் ,ஏழ்மையிலும் ஏழ்மையான(AAY) குடும்பங்கள் சேர்த்து 2,04,616 சிவப்பு அட்டைகள் உள்ளன. முன்னதாகவே 2015 இல் குடும்ப அட்டைகளுக்கு கோதுமை வழங்குவதை ,2016 ஜனவரியில் சர்க்கரை வழங்குவதையும், 2017 ஜனவரியில் மண்ணெண்ணெய் வழங்குவதையும் ஒன்றிய அரசு நிறுத்திவிட்டது.

உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அதன் விதிகள் 2015 ன் கீழ் வறுமையிலும் வறுமையில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு(AAY) ,ஒன்றிய அரசு ,அட்டை ஒன்றுக்கு மாதந்தோறும் வழங்கப்பட வேண்டிய 35 கிலோ அரிசிக்கு ஈடாக ரூபாய்1174.95 ம் வறுமைக்கோட்டுக்கு

கீழே உள்ள இதர குடும்ப அட்டைகளுக்கு நபர் ஒருவருக்கு அய்ந்து கிலோ அரிசிக்கு இணையாக ரூபாய்167.85 ம் குடும்பத் தலைவரின் வங்கிக் கணக்கில் செலுத்த ஆரம்பித்தது. அதேபோல் புதுச்சேரி மாநில அரசு, பொது விநியோக திட்டத்தின் கீழ் சிவப்பு குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் 20 கிலோ( ஒற்றை அவியல்) அரிசிக்கு ஈடாக ரூபாய் 600/- வறுமை கோட்டிற்கு மேலே உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 10 கிலோ (ஒற்றை அவியல்) அரிசிக்கு ஈடாக ரூபாய் 300 /- குடும்பத் தலைவர்கள் வங்கி கணக்குகளில் நேரடி பணப்பயன் பரிமாற்ற( Direct Benefit Transfer) திட்டத்தின் கீழ் இரண்டு திட்டங்களையும் இணைத்து கடந்த 8 ஆண்டுகளாக செலுத்தப்படுகிறது.

நேரடி பணப் பயன்பரிமாற்றம் பொது விநியோகத் திட்டத்தில் துவக்கப்பட்ட பின்னர் மாநில முழுவதும் இருந்த 515 நியாய விலைக் கடைகள் முழுவதுமாக மூடப்பட்டன. இவைகளில் பணிபுரிந்த சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்தனர். இவர்களுக்கு கடந்த காலங்களில் முறையான ஊதியம் புதுச்சேரி அரசு வழங்குவதில்லை. திடீரென்று வேலை பறி போனதாலும், முன்னூதிய நிலுவைச் சம்பளம் கிடைக்காததாலும் இவர்களுள் 16 பேர் வறுமையின் கொடுமை காரணமாக தற்கொலை செய்து கொண்டனர்.

குடும்பத் தலைவர்கள் பெரும்பாலும் ஆண்களாக இருப்பதால் அரிசிக்கு ஈடாக செலுத்தப்படும் பணம் உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு அவர்கள் செலவிடுவதில்லை. பெறப்பட்ட பணம் வேறு உபயோகங்களுக்கு மடைமாற்றம் செய்வது குடும்பங்களில் வாடிக்கையாக்கிவிட்டது. இதனால் பெரும்பாலான குடும்பங்களின் ஆதார உணவான அரிசி, பொருளாக இருப்பின்றி , இருப்பதால் பெண்கள், குழந்தைகள் ,முதியோர் கடும் உணவு நெருக்கடியை சந்திக்கின்றனர்.

புதுச்சேரி மாநிலத்தில் கள், சாராயம், வெளிநாட்டு மதுபான கடைகள் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 615 ஆகும் ( மாநிலத்தின் பரப்பளவு 492 சதுர கிலோமீட்டர்) . மேலும் சிலநூறு மது அருந்து கூடங்களும் ( Bar)உள்ளன. இதனால் ஏழை பாழைகள் பெறும் அரிசிக்கான பணம் பெருமளவில் மது அருந்துவதற்கு செலவிடப்படும் நெருக்கடிக்கு குடும்பங்கள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாதது ஆகின்றது

இவ்வாறு, உணவுப்பாதுகாப்பிற்கான செயற்கை நெருக்கடி, பெண்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகிறது .சமீப சில ஆண்டுகளாக அரிசி விலை தொடர்ந்து உயர்ந்து வருவது உழைக்கும் மக்களை தெருப் போராட்டங்கள் நோக்கித் தள்ளத் துவங்கியது. உணவுப்பாதுகாப்பை வலியுறுத்தி மீண்டும் பொது விநியோகக்கடைகளில் அரிசி உள்ளிட்ட இதர அத்தியாவசியப் பொருள்கள் வழங்க வேண்டி இககட(மா-லெ), இகக(மா), இகக மற்றும் இவைகளின் பெண்கள் அமைப்புகள் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல், அரசு அலுவலகங்கள் முற்றுகை என தொடர் போராட்டங்கள் புதுச்சேரி மாநிலத்தை உலுக்க ஆரம்பித்து விட்டன. 2016 ஆம் ஆண்டு முதலே அமைச்சர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் அவர்கள் முன்பு பெண்கள் கேள்வி கேட்டுப் போராடவும் துவங்கி விட்டனர். அப்போதைய காங்கிரஸ் ஆட்சி ,மக்கள் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல், ஒன்றிய பாஜகஆட்சியின் பொதுவிநியோகத்தில் கட்டாய நேரடிப் பணப்பயன் பரிமாற்றம்( DBT) என்ற சதிக்கு பலியாகி, 2021 சட்டமன்றத் தேர்தலில் படுதோல்வியை சந்தித்தது. 2021 இல் ஆட்சிக்கு வந்தால்' மூடப்பட்ட ரேஷன் கடைகளை திறப்போம்' என்ற வாக்குறுதியை தற்போதைய முதல்வர் ரங்கசாமி,பாஜகவுடன் கூட்டணி சேர்ந்து அளித்தார். தேர்தலின் போது பாஜக நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமனும் அதே வாக்குறுதியை அளித்தார். தொடர் மக்கள் போராட்டங்கள் ஏற்படுத்திய நெருக்கடி காரணமாக ஒன்றிய அரசு 2022 ஆம் ஆண்டில் மாநில அரசின் பொது விநியோகத் திட்டப்படி பொருட்களாக வழங்கலாம் என்ற பகுதி மாற்ற அறிவிப்பு செய்தது. ஆனாலும் மாநில அரசு நியாய விலைக்கடைகளை திறந்து அரிசி வழங்குவதை தொடங்கவே இல்லை.

வாக்குறுதிகளுக்கு துரோகம் இழைத்த என் -ஆர் காங்கிரஸ், பாஜக கூட்டணிக்கு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் (பாஜக வேட்பாளர் மாநில உள்துறை அமைச்சர் நமச்சிவாயத்தை தோற்கடித்து) புதுச்சேரி மக்கள் சரியான பாடம் புகட்டினர். மக்கள் போராட்டங்கள் தொடர்ந்தன. காலம் கடந்து ஆடிப்போன என் -ஆர் காங்கிரஸ் ,பாஜக கூட்டணி அரசு சென்ற அக்டோபர் முதல் மாநில பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 'மீண்டும் அரிசி வழங்கப்படும் 'என்று அறிவிப்பு செய்து, விநியோகம் அக்டோபர் மாதம் 21ஆம் தேதி துவங்கியது. மூடப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளை திறக்க எந்த முன்னேற்பாடும் செய்யாததால் அரிசி வழங்கப்படுவது அடையாள அளவிலேயே உள்ளது. என்- ஆர் காங்கிரஸ், பாஜக கூட்டணி அரசு அரிசிக்கு மக்களை ஆலாய் பறக்க விடுவது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது. நியாயவிலைக் கடைகள் முழுமையாக திறக்கப்பட்டு ஒன்றிய அரசின் உணவு பாதுகாப்புச் சட்ட விதிகள் படியும், மாநிலப்பொது விநியோகத் திட்டப்படியும் அரிசி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்படுவது தொடரும் வரையில் மக்களோடு இணைந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்) தனித்தும், இதர இடது ஜனநாயக சக்திகளுடன் இணைந்தும் போராடும்.

***எள்முதல் அரசினர் கொள்முதல் செய்க;***
***எப்பாங்கும் கடை வைத்து விற்பனை செய்க!***
***– பாவேந்தர் பாரதிதாசன***

# ஸ்டெர்லைட் வேதாந்தா; மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்க அனுமதிக்க கூடாது !

**–சந்திரமோகன்**

மதுரை மாவட்டத்தில் சுமார் 5,000 ஏக்கர் பரப்பளவில் டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைக்கும் உரிமத்தை, தூத்துக்குடி ஸ்டெர்லைட் கொலைகார நிறுவனமான வேதாந்தாவின் ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் ("Hindustan Zinc Limited"), ற்கு, கடந்த நவம்பர் 07 ல், பாஜக ஒன்றிய அரசின் சுரங்க அமைச்சகம் தாரை வார்த்துள்ளது.

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியான அழகர்மலைக்கும் பெருமாள்மலைக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில், தமிழர் நாகரிகத்தின் பெருமை பேசும் அரிட்டாபட்டி, மாங்குளம் பகுதிகளில் இந்த டங்ஸ்டன் சுரங்கத்திற்கான 2015 ஹெக்டேர் சுமார் 5000 ஏக்கர் இருக்கிறது. அரிட்டாபட்டி, மாங்குளம், மீனாட்சிபுரம், கூலானிப்பட்டி, செட்டியார்பட்டி, அ. வல்லாளப்பட்டி, சண்முகநாதபுரம், நடுவளவு, தெற்கு வளவு, எட்டிமங்கலம் உள்ளிட்ட ஊர்களில் இந்த சுரங்கப் பரப்பு வருவதாக சுரங்கத் துறை வரைபடங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

### டங்ஸ்டன் சுரங்கங்கள் ஏன் வேண்டாம்?

டங்ஸ்டன் கனிம சுரங்க செயல்பாடுகள் அப்பகுதியில், மண் அரிப்பை ஏற்படுத்தும் தண்ணீரை மாசுபடுத்தும். விவசாயப் பயிர்கள் வளர்ச்சி பாதிப்படையும். மண்புழுக்கள், நீர்வாழ் உயிர்களை அழித்துவிடும். மேலும், டங்ஸ்டன் கனிமத்தை பிரித்து எடுக்கப் பயன்படுத்தப்படுகிற சயனைட் கெமிக்கல் சுற்றுச்சூழலை நஞ்சாக்கிவிடும். மனிதர்களுக்கு நுரையீரல் சார்ந்த நோய்களை உருவாக்கும்; கருவுறுதலை பாதிக்கும்.

### அரிட்டாப்பட்டி பல்லுயிர் சூழல் மண்டலம்; பெருமாள் மலை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி அழிக்கப்படும் :–

தமிழ்நாடு அரசு, கடந்த 22.11.2022 ல் அரிட்டாபாடியில் சுமார் 477.4 ஏக்கர் பரப்பை தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் சூழல் மரபுதளமாக (Biodiversity Heritage Site) அறிவித்தது; இந்தப் பகுதியில் உள்ள கழிஞ்ச மலை, நாட்டார் மலை, ராமாயி மலை, அகப்பட்டான் மலை, கழுகு மலை / ஓவா மலை, தேன்கூடு மலை, கூகைக்கத்தி மலை உள்ளிட்ட மலைகளில பல்வேறு அரியவகை வன விலங்குகள், பறவைகளின் வாழ்விடமாக உள்ளன.

சுமார் 5.5 கி.மீ நீளமும் ஆயிரம் ஏக்கர் பரப்பளவும் கொண்ட பெருமாள்மலை – புள்ளிமான், மிளா மான், தேவாங்கு, காட்டு பூனை, மரநாய் உள்ளிட்ட பல்வேறு காட்டு விலங்குகளின் வாழிடமாக விளங்குகிறது.

சுரங்க செயல்பாடுகள் துவக்கப்பட்டால் இவை அனைத்தும் கட்டங்கட்டமாக அழிந்துபோகும்.

### தமிழர் பண்பாட்டு அடையாளங்கள் அழிக்கப்பட்டு விடும்:–

தமிழ்நாட்டில் இதுவரை கிடைக்கப்பெற்ற தமிழி கல்வெட்டுகளில் காலத்தால் பழமையான, கிமு 3 ம் நூற்றாண்டு மாங்குளம் கல்வெட்டு (2300 ஆண்டுகள் தொன்மையானது) மீனாட்சிபுரம் ஓவா மலையில் உள்ளது. இங்குள்ள குகை தளத்தில் 50க்கும் மேற்பட்ட சமணர் படுக்கைகள் எனப்படும் கற்படுக்கைகள் உள்ளன.

அரிட்டாபட்டி காமன்குளம் கண்மாயில் 3500 ஆண்டுகளுக்கு முந்தைய கற்திட்டைகள் - பெருங்கற்கால சின்னங்கள் தமிழர் நாகரிகத்தின் தொன்மை அடையாளமாக காணப்படுகிறது. அரிட்டாபட்டி கழிஞ்சமலையில் உள்ள குகைத்தளத்தில் 2000 ஆண்டுகள் தொன்மையான இரண்டு தமிழிக் கல்வெட்டுகள் காணப்படுகிறது; குகை தளத்தில் 10க்கும் மேற்பட்ட சமணர் படுக்கைகள் உள்ளன. அதுமட்டுமல்ல, கிபி 8 ம் நூற்றாண்டு பழமையான சிவன் கோயில் / குடைவரை கோயில் இங்கு அமைந்துள்ளது. கிபி 10 ம் நூற்றாண்டு மகாவீரர் சிற்பமும், தமிழி வட்டெழுத்து கல்வெட்டும் கூட உள்ளது. இவை அனைத்தும், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டவையாக அறிவிக்கப்பட்டு, Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Act, 1966 சட்டத்தின் கீழ் தொல்லியல் சின்னங்களாக பராமரிக்கபட்டும் வருகிறது.

கூடுதலாக, இப்பகுதியில் தமிழர் பண்பாடு பறைசாற்றும் ஏராளமான அய்யனார் மற்றும் அம்மன் கோவில்கள் இன்றளவும் உள்ளன. சுரங்க செயல்பாடுகள் வந்தால், இவை அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும்.

# டாஸ்மாக் மதுக்கடைகளை மூடப் போராடிய தோழர்களை கைது செய்து சிறையில் அடைத்ததற்கு இகக(மாலெ) கண்டனம்!

வேலூர் மாநகரம் பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள டாஸ்மாக் மதுபானக் கடைகள் பொதுமக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் பெரும் இடையூறாக உள்ளதாகக் கூறி பலமுறை மாவட்ட நிர்வாகத்திற்கு புகார் அளிக்கப்பட்டது. தொடர்ந்து சிபிஐ(எம்எல்) கட்சி சார்பாக மாவட்ட ஆட்சியருக்கு மனு அளித்து மேற்படி டாஸ்மாக் கடைகளை மூட வலியுறுத்தப்பட்டது. ஆனால், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படாததால் பொதுமக்களை திரட்டி சிபிஐ(எம்எல்) கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் சரோஜா தலைமையில், டாஸ்மாக் கடைகளுக்கு பூட்டுப் போடும் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் பின்னரும் டாஸ்மாக் கடைகளை அப்புறப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அறிவித்தபடி 19.11.2024 அன்று மேற்படி டாஸ்மாக் கடைகளுக்கு பூட்டுப் போடுவதற்கு சிபிஐ(எம்எல்) கட்சித் தோழர்களும் பொதுமக்களும் திரண்டனர். காவல்துறை அவர்களை கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்து வைத்தது. மாலை 6 மணிக்கு மேல் சிபிஐ(எம்எல்) கட்சியின் மாவட்டச் செயலாளர் சரோஜா, ஏஐசிசிடியு மாவட்ட பொதுச் செயலாளர் சிம்புதேவன், மாவட்டத் தலைவர் மாணிக்கம், மாவட்டக் குழு உறுப்பினர் ஏழுமலை, மற்றும் புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணியை சேர்ந்த மூன்று தோழர்கள் என ஏழு பேர் மீது மட்டும் வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் குற்ற எண் 483/2024, 189(2), 223, 126(2), 132, 351(2) BNS Act ஆகிய புதிய குற்றவியல் சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து அவர்களை சிறையில் அடைத்துள்ளது தமிழ்நாடு காவல்துறை. பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் கடையை அப்புறப்படுத்திடக் கோரி போராடியவர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது வன்மையான கண்டனத்திற்கு உரியது. மதுக் கடைகள் மூடப்படும் என்று சொல்லித்தான் திமுக ஆட்சியைப்பிடித்தது. ஆனால், கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக, பொது மக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் கடைகளை மூடச் சொன்ன சிபிஐஎம்எல் தோழர்களை கைது செய்திருப்பது முறையற்ற செயலாகும். தமிழக அரசு பிரச்சனைக்குரிய சாராயக்கடைகளை உடனடியாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்! கைது செய்யப்பட்ட சிபிஐ(எம்எல்) கட்சி மாவட்டச் செயலாளர் சரோஜா உள்ளிட்ட 7 தோழர்களையும் எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்!

சிறையிலிருக்கும் தோழர்களை இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் சொ.இரணியப்பன், அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க மத்தியக்குழு உறுப்பினர் உ.அதியமான் ஆகியோர் சந்தித்து வாழ்த்தும், ஒருமைப்பாடும் தெரிவித்தனர். பின்னர் மாவட்ட ஆட்சியரையும் சந்தித்துப் பேசினர்.

ஏற்கனவே, எண்ணற்ற கிரானைட் குவாரிகளால், கடுமையாக சுற்றுச்சூழல் சீரழிக்கப்பட்ட மதுரை மாவட்டம், மீண்டும் வேதாந்தா பன்னாட்டு கம்பெனியால் மிகப்பெரியதொரு அழிவை சந்திக்க உள்ளது.

இத் திட்டம் அமலானால், பல ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்படுவார்கள். விவசாயம் இயற்கை - சுற்றுச்சூழல் ஆகியவை எண்ணற்ற வகையில் பாதிப்புள்ளாக்கும்; அரிட்டாப்பட்டி பல்லுயிர் சூழல் மண்டலத்தை அழிக்கும். தமிழர் தொல்லியல் அடையாளச் சின்னங்களை ஒழித்துக் கட்டும்.

தமிழ்நாடு அரசு மக்களுக்கு தனது நிலையை தெளிவுபடுத்த வேண்டும்!

ஒன்றிய அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நாட்டின் கனிமவளங்களை தாரை வார்க்கும் நடவடிக்கைகளில் இருந்து ஏலத்தை அறிவித்துள்ள நிலையில், தமிழ்நாடு அரசு தனது நிலை பற்றிய விளக்கங்களை மக்கள் மத்தியில் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

ஒன்றிய பாஜக அரசின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கை முடிவுகளுக்கு, திட்டங்களுக்கு எதிராகவும், "கொலைகார ஸ்டெர்லைட் வேதாந்தா நிறுவனம் டங்ஸ்டன் கனிம சுரங்கம், மதுரை மாவட்டத்தில் அமைக்க தமிழ்நாடு அரசு அனுமதிக்க கூடாது" எனவும் நாம் போராட்டக் குரல் எழுப்புவோம்.



# குல்பிஷ் பாத்திமா!

*நீதி, மதச்சார்பற்ற அரசமைப்புச் சட்டத்தின் மீது கொண்ட உறுதிப்பாட்டுக்காக, கடந்த 4 ஆண்டுகள் 7 மாதங்களாக (ஏப்ரல் 9, 2020 முதல்) திகார் கொடுஞ்சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 27 வயது (கைது செய்யப்பட்ட போது) குல்பிஷ் பாத்திமா, குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கெதிராக (வடகிழக்கு தில்லி, சீலாம்பூரில்) போராடிக் கொண்டிருந்த பெண்களுடன் கரம் கோர்த்து களமாடினார்.*

*பல பொய் வழக்குகளுடன் கொடூரமான உபா சட்டத்தின் கீழும் கைதுசெய்யப்பட்டு வெஞ்சிறைக்குள் வைக்கப்பட்டுள்ளார் பாத்திமா.*

*இரண்டு வழக்குகளில் பிணை வழங்கப்பட்டாலும் வெளியே வரமுடியாமல் உபா வழக்கு. பல்கலைக்கழக உயர்கல்வி பயின்றவர். நீதிக்கான, ஜனநாயகத்துக்கான போராளி.*

*சிறை அவரை சிறைப்படுத்தவில்லை. சிறைவாசிகள், அவர்தம் குழந்தைகளுக்கு ஆசிரியராக்கியது.*

*சிறையின் இருள் கவிந்த பாறைக்குகைக்குள்ளிருந்தும் சிறகடித்துப் பறக்கும் கவிஞராக்கியிருக்கிறது.*

*அவருக்கு முன்பே சிறையிலிருந்து விடுதலை பெற்ற அவரது சில கவிதை வரிகள்.*

*புன்னகைக்கத் துணிந்த நிலவு!*
*பல நேரங்களில்,*
*ஒவ்வொரு நாளும் ஏணிபோலாகி விடுகின்றன.*
*ஒவ்வொரு படியாக ஏறிக்கொண்டிருப்பதாகவே உணர்கிறேன்.*
*ஆயினும் நான் சென்று சேரவேண்டிய இடத்தை எட்டிப்பிடிக்க முடியவில்லை.*
*நிலவு எனது நல்ல நண்பராக, அல்லது*
*நம்பிக்கைக்குரியவராகி விடுகிறது.*
*நிலவை என்னால் பார்க்க முடிகிறது.*
*அநேகமாக அது முழு நிலவாக இருக்கக் கூடும்.*
*அது*
*மேகங்களுடன் போராடிக் கொண்டிருக்கிறது.*
*இருள் கவிந்த மேகத்தின் சிறகுகள்*
*அதை மறைத்துவிட முயற்சிக்கின்றன.*
*அந்த நிலவு அடங்க மறுக்கிறது;*
*அச்சுறுத்தும் இருட்டை மீறியும்*
*அது புன்னகைக்கத் துணிகிறது, ஒளிரத் துணிகிறது!*

***இகக (மா லெ) பொதுச் செயலாளர் திபங்கர் முகநூல் பக்கத்திலிருந்து***
***தமிழில்: இளவழகன்***

***அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக சிறைவைக்கப் பட்டுள்ள உமர் காலித் உள்ளிட்ட அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்!***

## வீடு, வீட்டு மனை கோரி ஆர்ப்பாட்டம்




வேலூர் மாவட்ட சிபிஐ எம்எல் கட்சி சார்பில் வஞ்சிக்கப்பட்ட இருளர் இன மக்களின் கோரிக்கையை நிறைவேற்றக் கோரியும் வீட்டு மனையுடன் வீடு கட்டி தரக்கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. அதேபோல், வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட அரியூர் 58 வார்டில் திருமலைகோடி பகுதி விஸ்வநாத நகர், அண்ணாநகர், அவுசிங் போர்டு, நரிகுறவர் பகுதி நம்பிராஜபுரம்,ஆவாரம்பளையம் பகுதியில் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் மக்களை சாலை விரிவாக்கம் என்ற பெயரில் முறையில்லாமல் அப்புறப்படுத்துவதைக் கண்டித்தும் அம்மக்களுக்கு மாற்று இடம் அளித்து அரசே வீடு கட்டி தரக் கோரியும் சாலை விரிவாக்கத்தால் பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுக்கக் கோரியும் சிபிஐஎம்-எல் சார்பில் 13.11.2024 அன்று சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. சிபிஐ(எம்எல்) வேலூர் மாவட்டச் செயலாளர் சரோஜா ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஏ.மாணிக்கம், சீ.அ.சிம்புதேவன், ஆர்.பாத்திமா, ஜி.மலர், எஸ்.மகேஷ்வரி, ஆர்.தசரதன், எஸ்.சதீஷ், ஜி.செந்தில்நாதன், எஸ்.வாசுதேவன் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சியில் மக்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம்

திருச்சி மாவட்டம், மணப்பாறை ஒன்றியத்தில் 21.11.2024 அன்று மக்கள் கோரிக்கைகள் மற்றும் வீட்டு மனை மற்றும் வீடுகள் அரசே இலவசமாகக் கட்டித் தரக் கோரி இகக(மாலெ) சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, ஆர்ப்பாட்டம் முடிந்து மணப்பாறை வட்டாட்சியரைச் சந்தித்து சமுத்திரம் கிராம மக்களுக்கு வீட்டுமனை வழங்கி வீடு கட்டி தர வேண்டும் என்ற கோரிக்கையை அடங்கிய மனுவை வட்டாட்சியரிடம் கொடுக்கப்பட்டது. இதில் இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் ராஜ்குமார், ஒன்றியச் செயலாளர் பாலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியத்தில் 22.11.2024 மக்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனை முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையை தாலுகா மருத்துவமனை என்று அறிவித்துவிட்டு, அதற்கான அடிப்படை வசதிகள் எதுவும் செய்யாமல் இருப்பதைக் கண்டித்தும், பிரசவத்திற்காக கூட மணப்பாறை மருத்துவமனை கொண்டு செல்ல வேண்டிய அவல நிலை உள்ளதைக் கண்டித்தும், வார்டுகளில் நடக்கும் சட்டவிரோதச் செயல்களைக் கண்டித்தும் பொன்னம்பட்டி பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட அனைத்து மக்களுக்கும் 100 நாள் வேலையை முழுமையாக அமல்படுத்திட கோரியும், ஒன்றாவது வார்டில் நல்ல குடிதண்ணீர் வழங்கக் கோரியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து உப்பாக வரும் குடி தண்ணீரை வாட்டர் கேனில் பிடித்துக் கொண்டு பொன்னம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களிடம் கொடுத்து குடித்துப் பார்க்கச் சொல்லப்பட்டது. இதில் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் செயல் அலுவலர் அவர்கள் 10 நாட்களுக்குள் குடிநீர் பிரச்சனை தீர்த்து வைக்கப்படும் என உறுதி அளித்தார். மக்களின் மற்ற அடிப்படை பிரச்சனைகளான குடிநீர் பிரச்சனை, தெரு விளக்கு பிரச்சனை, சாலை வசதி மற்றும் பிரதமர் திட்டத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு பணத்தை உடனடியாக ஒதுக்குதல் உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாகவும் மனு கொடுக்கப்பட்டது. மேற்படி நிகழ்வுக்கு இகக(மாலெ) மருங்காபுரி ஒன்றியச் செயலாளர் தோழர் பழனிவேல் தலைமை தாங்கினார். அதில் மாநிலக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ராஜ்குமார், மணப்பாறை நகரச் செயலாளர் பாலு உரையாற்றினர்.

## தாக்கப்பட்ட வழக்கறிஞர் கண்ணன் குடும்பத்தினருக்கு ஆறுதல்

ஓசூரில் நீதிமன்ற வாயிலில் தாக்குதலுக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வழக்கறிஞர் கண்ணனை இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் (AILAJ) மத்தியக் குழு உறுப்பினர் உ.அதியமான், அகில இந்திய தொழிற்சங்க மைய கவுன்சில் (AICCTU) மாநில சிறப்புத் தலைவர் தோழர் சொ.இரணியப்பன் ஆகியோர் நேரில் சென்று பார்த்து வழக்கறிஞர் கண்ணனின் அண்ணன் மற்றும் தாயாரைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்கள்.



## அகில இந்திய விவசாயிகள் மகாசபை கோரிக்கை ஆர்ப்பாட்டம்


அகில இந்திய விவசாயிகள் மகாசபை சார்பாக 20.11.2024 கோரிக்கை ஆர்ப்பாட்டம் கள்ளக்குறிச்சியில் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய சங்க மாவட்டத் தலைவர் வீரன் தலைமை தாங்கினார். விவசாய சங்க மாவட்டச் செயலாளர் ஆறுமுகம், இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் கலியமூர்த்தி விவசாய சங்க மாநிலக் குழு உறுப்பினர் அய்யந்துரை, விவசாய சங்க மாவட்டக் குழு உறுப்பினர் ஏ.கே.ஜான் கண்ணன், எல்லப்பன், சேட்டு, அந்தோணி தாஸ், ஆரோக்கியசாமி மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்



## அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் ஒன்றியம் அவிகிதொச சார்பாக கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு 18.11.2024 அன்றுகொட்டும் மழையில் மக்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம் இகக(மாலெ) மாநில குழு உறுப்பினர் கே.மாசிலாமணி தலைமையில் கும்பகோணம் ஒன்றியச் செயலாளர் என்.நடராஜன் முன்னிலையில் நடைபெற்W றது. அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என் . குணசேகரன் கோரிக்கையை விளக்கிப் பேசினார். ஆர்ப்பாட்டத்தில் இகக(மாலெ) தஞ்சை மாவட்ட செயலாளர் டி.கண்ணையன், பாபநாசம் ஒன்றியச் செயலாளர் கே.செல்லத்துரை, திருவிடைமருதூர் ஒன்றியச் செயலாளர் பாரதிதாசன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் பிரபு, சீனிவாசன், கலா, ஜான் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து வீட்டு மனைப்பட்டா, நூறு நாள் வேலை முழுமையாக அரசு அறிவித்த சம்பளத்துடன் வழங்குவது என கோரிக்கை மனு வட்டாட்சியரிடம் வழங்கப்பட்டது.

# சிபிஐஎம்எல் நாடாளுமன்ற உறுப்பினர் சுதாமா பிரசாத் ரயில்வே நிர்வாகம் அளித்த விலையுயர்ந்த பரிசுகளை திருப்பி அனுப்பினார்



Sudama Prasad
सुदामा प्रसाद

Member of Parliament
Lok Sabha
Ara (Bihar)

02.11.2024

To,
C M Ramesh (Hon'ble MP),
Chairperson, Standing Committee on Railways,
Parliament of India, Delhi

**Subject**: Returning of Gifts Issued by RITES and Rail Vikas Nigam Ltd.

Respected Sir,

Firstly, I would thank you the Standing Committee on Railways and the Indian Railways for making elaborate arrangements for members of Standing Committee for attending the study tour organised from Bangalore, Tirupati to Hyderabad between 31st October and 7th November 2024.

The reason for me writing this letter is to express my inability to accept few gifts given by various organisations of South Western Railways. I do understand that it is a tradition to welcome the Members of Parliament and guests with gifts as a gesture of warmth and hospitality. Flowers, shawls, paintings and few memorabilia are generally given as welcome gifts.

However, what has pained me are the gifts given by RITES and Rail Vikas Nigam Limited. Yesterday, late in the night RITES and Rail Vikas Nigam Limited people visited my room and presented with two bags of memorabilia. As I was tired from my day's work, I didn't immediately look into what was given to me. Later in the night I discovered 1 gram gold coin and 100 gram silver block was given to me by RITES and Rail Vikas Nigam Limited, respectively. I was taken aback and raised questions about public morality and ethics on part of Indian Railways for having given such gifts.

At a time when passengers are facing multiple challenges of railway safety, increasing fares, lack of facilities and humiliating treatment by Indian Railways, such gifts given to standing committee members is not only unethical, but borders on corruption to silence the MP's from raising issues concerning the general public.

Sanitation workers in railways stations are not paid minimum wages, are forced to work on contract and face harassment at the hands of contractors. Similarly, common people are made to travel without dignity in general and sleeper compartments. No new trains are introduced for the poor and the middle class with the focus primarily being on Vande Bharat led trains.

Similarly, I request the Chairman of Standing Committee to pass on instructions to Indian Railways management to arrange normal and not extravagant accommodation like five stars for standing committee meetings or official meetings. We are public representatives and have a duty to adhere to strict public morality and ethics.

I hope to return the gold and silver given to me as gift in front of the committee members and wish to express my dissatisfaction and anger for treating a member of Parliament in this manner.

Thanking Y[ou]

Sudama P[rasad]

Email : sudama.prasad061@sansad.nic.in | Phone : +91 7004783698




கடந்த 2024 அக். 31 முதல் நவ. 7 வரை பெங்களூர் முதல் திருப்பதி ஹைதராபாத் வரை இரயில்வேயில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட நிலைக்குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்டது. அக் குழுவில் இருந்த சிபிஐ(எம்எல்) எம்.பி. சுதாமா பிரசாத் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விருந்தினர்களுக்கும் ரயில்வே நிர்வாகம் 1 கிராம் தங்கம், 100 கிராம் வெள்ளிக் கட்டி உள்ளிட்ட பரிசுப் பொருட்களை அளித்தது; சிபிஐ(எம்எல்) விடுதலை கட்சியின் ஆரா தொகுதி எம்.பி. சுதாமா பிரசாத், ஆய்வு பயணத்தின் போது RITES மற்றும் ரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் நிறுவனங்கள் அவருக்கு அளித்த பரிசுகளை திருப்பி அனுப்பினார்.

இது குறித்து 20 நவம்பர் 2024 அன்று ரயில்வே நிலைக்குழு தலைவர் சி.எம். ரமேஷுக்கு சுதாமா பிரசாத் அனுப்பியுள்ள கடிதத்தில், "இந்திய ரயில்வே, பாரம்பரியமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், விருந்தினர்களை வரவேற்கும் வகையில் சால்வைகள், ஓவியங்கள், மலர்கள் அல்லது பிற நினைவுப் பரிசுகள் கொடுப்பது வழங்கமானது. ஆனால், தங்க நாணயம், வெள்ளிக் கட்டி போன்ற நெறிமுறைகளுக்கு எதிரான பரிசுகளை வழங்கியது எனக்கு மிகுந்த வேதனையை அளித்துள்ளது" எனக் கூறி இந்திய ரயில்வேயின் செயலை அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இப்போக்கு குறித்து கவலை தெரிவித்த சுதாமா பிரசாத், "ரயில் பயணத்தில் பாதுகாப்பற்ற நிலை, ரயில் கட்டண உயர்வு, வசதிக் குறைபாடுகள், அவமானப்படுத்தப்படுவது என பயணிகள் சந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, நிலைக்குழு உறுப்பினர்களுக்கு இத்தகைய விலையுயர்ந்த பொருட்களை வழங்குவது நெறிமுறைகளுக்கு எதிரானது என்பது மட்டுமல்ல, இது பொதுமக்களின் பிரச்சினைகளை எழுப்பும் எம்.பிக்களை மவுனமாக்கிட ஊழல்படுத்தும் முயற்சியுமாகும்" என்று கூறினார்.

மேலும், ரயில்வேயில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கூட வழங்காமல், ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டு, ஒப்பந்ததாரர்களால் துன்புறுத்தப்படுகிறார்கள். அதேபோல், பொது வகுப்பு, உறங்கும் வசதி வகுப்புப் பெட்டிகளில் பயணிப்பவர்களுக்கு கவுரவமான பயணம் கிடைப்பதில்லை. ஏழை, நடுத்தர வர்க்கத்திற்கான புதிய ரயில்களை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக, வந்தே பாரத் போன்ற அதிஉயர் கட்டண ரயில்களை இயக்குவதில்தான் அரசு அதிக கவனம் செலுத்துகிறது.

அதேபோல், இந்திய ரயில்வே நிர்வாகம் நிலைக்குழு கூட்டங்கள் அல்லது அதிகாரிகள் கூட்டத்திற்கு ஆடம்பரமான அய்ந்து நட்சத்திர ஓட்டல்களை ஏற்பாடு செய்யாமல் சாதாரணமான ஓட்டல்களில் நடத்துவதற்கு ரயில்வே நிலைக்குழுத் தலைவர் அறிவுறுத்த வேண்டும். நாமெல்லாம் பொதுமக்களின் பிரதிநிதிகள், பொது அறநெறிகள், நெறிமுறைகளைக் கறாராகக் கடைபிடிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ள தோழர் சுதாமா பிரசாத் தனக்கு அளிக்கப்பட்ட தங்கம், வெள்ளி பரிசுகளை நிலைக்குழு உறுப்பினர்கள் முன்பு திருப்பி அளித்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான தன்னை இது போன்று நடத்தியதற்காக தனது அதிருப்தியையும், கடும் கோபத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். சாதாரண குடிமக்களுக்கு ரயில்வே சேவையை மறுக்கும் மோடி ஆட்சியின் செயல்பாட்டை இது குறிக்கிறது என்றும் விமர்சித்தார்.

**சி.மதிவாணன்**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.11.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023




அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் (AILAJ) தமிழ்நாடு மாநில முதல் பொதுப் பேரவை




வேலூர்: வீடு; வீட்டு மனை கோரி ஆர்ப்பாட்டம்

திருச்சியில் மக்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம்



Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh